உ

கடவுட்டுணை.

திருவரங்கச்சந்நிதிமுறை.

காவேரியின்மத்தியில் அரங்கமாநகரத்தில் வைகுண்ட
விமானத்தில் திருமகள் நிலமகள் சமேதராயும்
விபீஷணாழ்வார் கவரிவீசவும் நாரதமகா
முனிவர்யாழ் வாசிக்கவும் ஆயிரம்ப
ணாமுடியையுடைய சேஷசயன
த்தின்கண் அரியநித்திரை
செய்கின்ற கார்வண்ண
சொரூபி
யாகிய
ஸ்ரீரங்கநாயகர் திருவருள்பெற்று
அரியக்குடியில் மடங்கட்டிவசிக்கின்ற
நமசிவாயநாவலர் பாடியது.

இஃது
மயிலம்
சுப்பிரமணிய சுவாமிகளால்
பார்வையிடப்பட்டு,

சென்னை-இட்டா
பார்த்தசாரதிநாயுடு
அவர்களது
ஸ்ரீபத்மநாபவிலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பட்டது.

1906.

சென்னை:—ஆசாரப்பன் தெருவு, நெ-84

கடவுள்துணை.

அவையடக்கம்.

ஜெயமாகவாழு மெழுவகைத்தோற்றமுஞ் சித்திரத்தில்
நயமாவெழுதத் தணிந்ததைப்போலரி நாரணன்மேற்
சுயமாயுரைத்த துதித்துவின்மாலையைத் தொல்லுலகிற்
றயவாப்பரிந்தருண் மேலோர் திருவடித் தாட்டுணையே.

கடல்கிழக்குத்தெற்கு கரைபுரளும்வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையும் - வடதிசையில்
வளநாட்டுப்பண்ணை யிருபத்துநாற்காதஞ்
சோளநாட்டெல்லையெனச்சொல்.

இவ்விதமாகச் சொல்லப்பட்ட சோழவளநாட்டுக்குள்ளானபுதுக்கோட்டை யென்னுஞ் சமஸ்தானத்தில் சற்றேரக்குறைய (சூ0)வருடத்துக்குள்ளாக பிரதானிக்கஞ் செய்திருந்த தக்ஷணத்துவேளாளன் குலத்திலகராகியும், சிவபூசை சிவார்ச்சனை சிவபக்தி சிவனடியார்நேச விசுவாசஞ் சிறந்தவராகியும், விளங்காநின்ற ஸ்ரீமது வைகுந்தம் பிள்ளையினுடைய நல்வினைப்பயனால் மிகுந்த சந்ததியான தானப்பிள்ளையினது மரபிற் றோன்றிய பொன்னம்பலம் பிள்ளையின் நன்னயபுத்திரராயும், ஸ்ரீரங்கநாதருடைய அனுக்கிரகம் பெற்று (சய) வயதுசென்று இப்போது அரியக்குடியில் மடங்கட்டி அந்தமடத்தில் வசிக்கின்றசுத்தப்பிரமச் சைதன்யமுடைய நமசிவாய னென்னும் நற்பெயர் பூண்ட நாவலன் பாடிய இத்திருவரங்கச் சந்நிதிமுறையை யாவருமெளிதி லுணரும்பொருட்டு களத்தூர்-தமிழ்புலவர் வேதகிரி முதலியார் குமாரர் ஆறுமுக முதலியாரால் பிழையறப்பரிசோதித்து நிறைவேறியது.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

கார்வண்ணமாலை.

காப்பு.

சீர்மேவியராம கதைதனைமுப்பது செந்தமிழால்
பார்மேல்விலங்கவிக் கார்வண்ணமாலைப் பருவல்சொல்ல
தார்மேவுமேரு வில்வாங்கியசக்கர சக்தியருள்
கார்மேனியைங்கர மும்மதத்தோன்பதங் காப்பதுவே,

தேவருமேலவர் தீங்கினைக்கூறச் சிவனயன்மால்
மூவருங்கூடி யிராவணனுயிர் முடிப்பதற்கு
மேவுந்தசரதப் புத்திரனாக விளங்கவந்த
காவலனேயிக மெந்தனைக்காத்தருள் கார்வண்ணனே. (க)

முந்தவயோத்தியிற் றம்பியர்மூவர் முறைமுயங்கத்
தந்தையின்சொற்படி கோசிகனுக்குத் தவத்துணையாய்
சிந்தைமகிழ்ந்திடத் தாடகைதன்னைச் சிரமறுத்த
கந்தமலர்ப்பதனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (உ)

வலியானகோசிகன் பின்னேநடந்து வரும்வழியில்
கிலியாமகலிகை சாபமும்தீர்ந்துக் கிரியைசெய்து
சலியாமல்வில்லை தான்வளைத்தன்று சானகியைக்
கலியாணஞ்செய்த வபிராமகாத்தருள் கார்வண்ணனே. (ங)

சௌரியம்பேசி யின்றந்தைமுன்வந்த பருவலனை
அவஜபமாக்கி பரதனைக்கேகய நாடனுப்பி
நவமணிமாட நகர்புகுந்தேமுடி நாட்டுதற்காங்
கௌசலபுத்திரனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (ச)

வைகையுமெய்திடு முன்னடையினுறு மனவெறுப்பாஞ்
செய்கைகள்கூனி கலைத்திடப்பார்த்திபன் தேம்பவரம்
உய்கையிலாள்மகன் பாராளக்காட்டி லுனைவிடுத்த
கைகைதனைப்பணிந் தேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (ரு)

வன்கைமனத்தணங் கைகேசியீந்த மரவுரியுஞ்
செங்கையிலேந்திய வில்லுடன்றம்பியுந் தேவியுமாய்

பங்கயம்போன்முகங் கொண்டுசென் றேகுகன் பண்புகந்த
கங்கைகடந்தவ னேயெனைக்காத்தருள் வண்ணனே (௬)

காட்டியசேனைசலை நாட்டைப்பார்த்து நன்மகுடஞ்
சூட்டித்திருவடி பாதுகையீந்தா சுரமுடனே
நாட்டிநயங்கிய தம்பியுந்தானுஞ் சானகியுடன்
காட்டிநடந்தவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே (௭)

பழுதுசெய்தேவந்த பாவிவிராதன் பணிந்தடி
தொழுதெம்போதவன் றன்பத்தைநீக்கித் துயரினுழன்
றழுதபயமேனு மந்தணர்க்காசி யளித்தளிசேர்
கழுகிடஞ்சென்றவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே (௮)

வஞ்சனென்றம்பறை செய்துசடாயு வனந்தனின்மா
சஞ்சலந்தீர்வுற மூவரும்பன்னசாலையுற்று
பஞ்சவடியி லரக்கர்வரும்வினைப் பார்த்திருந்த
கஞ்சமலர்ப்பத னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே (௯)

நாரியென்றேவந்த சூர்ப்பநகையெனும் ராட்சதியைக்
கூரியவாள்கொண்டு மூக்கையுங்காதையுங் கொய்தினைபோன்
வீரியமாக வுனைத்தொழுதேத்த விழைந்திஃதே
காரியமென்றவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே (௰)

ஆர்த்தாரணிய ராவணன்தம்பியுந் தூடணனுஞ்
சீர்த்தொடுதேர்பரி யானைபதாதி தைத்தியரும்
சீர்த்தாரமாக முகூர்த்தத்தின்மாள வெடுஞ்சிலைபாய்
கானத்தினைவென்றவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே (௰௧)

நிலைபோமிராவணன் றங்கையின்பேச்சை நிசமென்றெண்ணி
மலையாமாரீசனை மாலுருவாக்கி வனத்தனுப்ப
சிலைபோல்விழிநுதற் சீதையின்சொற்படி சென்றுவில்லான்
கலைமானையெய்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே (௰௨)

துலங்கியகாட்டி லிலக்குமணன்செலத் தாட்டருணத்
திலங்கிராவணன் சீதையைத்தேர்மேற்கொண்டேட்டிடமா
விலங்கினம்பட்சிகள் விண்ணோர்பூமியு மெய்யுருகக்
கலங்கிமலைத்தவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே (௰௩)

சிவந்திருகண்களுந் தீயெழக்காய்ச்சிச் சிரகிறப்பார்
கவந்துறுதீரச் சடாயுவைக்கண்டு கனழ்ந்துருகி
தவந்தருதீக்கடன் செய்துமுடித்தாற் றம்பியுடன்
கவந்தனைவென்றவ னேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. (௰௪)

சவரியைக்கண்டு தருங்கனியுண்டு நயவுடன்பா
லுவரியிற்பாய லுருவாங்கனிட்ட னுடன்பம்பையிற்
சிவனுருவான வனுமானைக்கண்டு தெளிந்துமனக்
கவலையுரைத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௰௫

இன்புபமேரு சுக்கிரீவன்வணங்கச் செயமெனவே
பண்புகொண்டேழு மராமரமெய்து நடந்தவென்பை
விண்புகக்கால்கொண் டெறிந்துமுன்சிதை வெறுத்தபணி
கண்புகக்கண்டவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௰௬

வானுண்மிகுத்திடு தாரகையோடணி மாநகருங்
கோனுமற்றைவசு மாக்கியத்தம்பியைத் தூஷணித்த
வீனுங்கொடுமை விறன்வாலியைக்கொல்ல வில்லிலம்பைக்
கானுமலைத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௰௭

பார்மீதுவாலியைக் கொன்றுசுக்ரீவன பதிக்கரசாய்
சீர்மேவுகிட்கிந்தை ராச்சியபாலனஞ் செய்யெனத்தேன்
தார்மேவுகாட்டின் மதங்கவலையினிற் றம்பியுடன்
கார்காலங்கண்டிருந் தோயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௰௮

துணையானபக்குவச் சுக்ரீவன்வாழ்த்தித் தொழுதிடப்பே
ரணையானவானரச் சேனைகளுற்றிசை யாகவென்ன
இணையானதென்றிசைக் கேகநுமான்ற னிருகரத்திற்
கணையாழியீந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௰௯

வன்றிருகுயிற்கிள்ளை பாடுமசோக வனத்தனிற்றூர்
விண்டுவிம்மபோதிருஞ் சென்றீந் தசீதைகிளம்புமொழி
கொண்டுவந்தேனென் சூடாமணியைக் கொடுத்திடக்கண்
கண்டுமகிழ்ந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௰

தருணமிதென்று சார்புக்கிவீடணன் றாழ்ந்தொழில்சேர்
மருமலர்ச்சாத்தியுன் பாதாரவிந்தம் வணங்கியநாள்
பருதிமதிநதி பாருள்ளமட்டும் பதிக்கரசாய்க்
கருணைபுரிந்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௧

இடமானசற்ப சயனத்தினியுமோ ரேழுதினம்
திடமானசெய்தி சமுத்திராசன்றெ ரிந்துதொழ
அடைவானவானரச் சேனையைக்கூட்டி யகலநெடுங்
கடல்வாயடைத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௨

துவசக்கொள்சேனை யிலங்கையிற்சண்டை தொடுத்திடக்கால்
கவரியசைத்திடக் கட்டியங்கூறக் கனகமலைக்

குவரியதான மணித்தேரினுற்றிடு மிராவணனைக்
கவசமறுத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௩

சொர்ணமுற்றோங்கிய தேரோடுராட்சதர் தூளிசெய்து
வர்ணமதாமுதிரப்பெருக்கோடிடவாகவர்கள்
நிர்ணயமாயுனைக் காசினிளம்ப விட்டோதும்ப
கர்ணனைக்கொன்றவனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௪

சிவந்தவருக்கணை யிந்திரசித்தன் செலுத்துமுனே
முனைந்தவராவி யழிபாமற்காங்க முறையுடன்சீர்
நினைந்துகருடனும் வந்துவணங்கியே நேரின்மனங்
கனிந்துரைசெய்தவனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௫

விண்டலம்பூமியும் வேசனும்வேந்தனும் விண்ணவருங்
சண்டனுங்கண்டு மனந்தளர்காலையிற் சஞ்சீவினியைக்
கொண்டனுமான்வந் துயிர்தரக்கோகுலக் கூத்தினைக்கண்
கண்டருள்விண்டவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௬

பொய்மாய்கையாகப் புரிந்திடுமிந்திரச் சித்தனும்
மெய்சோர்ந் துயிர்விடச் செந்தழல்வாளி விடுத்துனிதங்
தொய்யாவெனத்தம்பி மேலன்புகொண்டெழிற் கோவலாக்
கைவாளியீந்தவனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௭

மிண்டனிராவணன் கூட்டியமூலபலத்தைவிண்மேல்
அண்டருங்கண்டு மகிழ்ந்துய்யவோர்மோகனக்கணையாற்
றுண்டமதாகத் துகள்போக்கிராவண னூர்த்தனையுங்
கண்டமறுத்தவனே யெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௮

இனிதானசீதை சிறைநீக்கியண்ட ரிடர்போக்கிமேற்
றனியாயிலங்கை விபீஷணர்க்காக்கித் தனுக்கோடிசென்
றனிதாமுனிவனங் கண்டுஜெயஞ்சொல்லி யும்பர்மகிழ்
கனியாயமுதுண் டவனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௨௯

இராச்சியங்காக்கின்ற ராசாதிராசர்க்கும் நான்முகற்கும்
பூச்சொரிவானவர் மாதவர்தம்பியர் பொன்மனைக்கும்
தாட்சியில்லாமல் வசிஷ்டர்கையான்முடி தாங்கிச்சுகக்
காட்சிகொடுத்தவனேயெனைக்காத்தருள் கார்வண்ணனே. ௩௰

கார்வண்ணமாலை-முற்றிற்று.

—(*)—

அரங்கப்பத்து

—(*)—

இருவினைப்பயனுலர்ந்த யிகத்தினிலிருந்திடாமல்
மருமலரெடுத்தவர்தன் மலரடிபூசைசெய்தேன்
கருமுதற்போக்கினிப்பொற் கழலிணையளித்தாட்கொள்ளும்
அருமறைப்பொருளதான வரங்கமாநகருளானே. ௧

மாயையும்பிறவிநோயும் வல்வினையானதீங்கும்
நாயேனைத்தொடர்ந்திடாமல் நானுனக்கடிமையானேன்
சேயெனக்கிப்போதுந்தன் திருவருளளித்தாட்கொள்ளும்
ஆயனேயமரர்போற்று மரங்கமாநகருளானே. ௨

மாதர்தம்வலையிற்சிக்கி மயங்கியேபிறவிநோயால்
பூதலத்தலைந்திடாமற் பொற்பாதம்போற்றிசெய்தேன்
சீதரமுகுந்தாவுந்தன் திருவருளளித்தாட்கொள்ளும்
ஆதியேயமரர்போற்று மரங்கமாநகருளானே. ௩

மடமயிலென்னுமின்னார் வழிதரும்பிறவிநோயால்
சடமுருவெடுத்திடாமற் றமியனானுந்தன்பாதம்
திடமதாய்ப்போற்றிசெய்தேன் திருவருளளித்தாட்கொள்ளும்
அடமகன்றமரர்போற்று மரங்கமாநகருளானே. ௪

மண்டலந்தன்னிற்பன்னாள் வளர்ந்திடும்பிறவிநோயாற்
சண்டன்வந்தெனைத்தொடாமற் றமியனுன்னம்பொற்றாளை
தெண்டனிட்டுருகிநைந்தேன் திருவருளளித்தாட்கொள்ளும்
அண்டர்கள்பணியுங்கோவே யரங்கமாநகருளானே. ௫

வஞ்சனையானசூது மாயையும்பிறவிநோயும்
எஞ்சியவென்னைத்தொடாம லிணைமலர்ப்பதம்பணிந்தேன்
செஞ்சிலைவளைத்தராம திருவருளளித்தாட்கொள்ளும்
அஞ்சலேயென்னைக்காப்பா யரங்கமாநகருளானே. ௬

இத்தனைதன்னிற்சன்ம மெடுத்தெடுத்தலுத்தேயாமல்
வித்தகமுகுந்தன்பாத மிணையினைப்போற்றிசெய்தேன்
சித்தமதிரங்கியின்று திருவருளளித்தாட்கொள்ளும்
அத்தனேயென்னைக்காப்பா யரங்கமாநகருளானே. ௭

கயலிணைவிழியார்தங்கள் கவடெனும்வலையிற்சிக்கி
நயனநீர்சொரிந்துமல்க நானுனக்கடிமையானேன்
ஜெயமதாயெனக்கிப்போதுன் திருவருளளித்தாட்கொள்ளும்
அயன்முதலமரர்போற்று மரங்கமாநகருளானே. ௮

பொய்யெலாஞ்சபலன்றன்னைப் போற்றியேபுகழ்ந்துவித்தங்
கையலர்வல் யால்நீக்கி கயக்கினான்மயங்கிடாமல்
செய்யனேயெனக்கிப்போதுன் றிருவருளளித்தாட்கொள்ளும்
ஐயனேயமரர்போற்று மரங்கமாநகருளானே. ௬

வருநீபெருநீயெம் மூரவுநீயழிவுநீயிப்
பாருநீயுயிர்கட்கெல்லாம் படியளப்பவனுநீயித்
தேருநீயருளானந்தன் றிருவருளளித்தாட்கொள்ளும்
அருமற்றேற்குநீயே யரங்கமாநகருளானே. ௭

எண்ணையுமுருவாய்ச்செய்த விருதையுநொந்தான்வேதன்
பின்னையுமேமனைவி பிடித்தெனைச்சலித்தான்பூமி
தன்னிலேவுருவாமூர்த்தி தானமைக்கினேத்தானித்தம்
அன்னையஞ்சுமந்தனுத்தா னரங்கமாநகருளானே. ௰

அரங்கப்பத்து-முற்றிற்று.

இரங்கப்பத்து.

——(*)——

பொருளேசுவையேசுவரசமே புலனேபொறியேபுலனறியா
மருளேதனியேனைமலையே வளர்வேகுறைவேமயங்குகின்ற
இருளேயொளியேகதிமதியே யிதமேபாவேயெளியனுரையும்
அருளேயமுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௧

இணையேகளவேவணங்கினர்க்கு மிசைவேவிசமேயெனக்குவருந்
துணையேயபிவேமறைமொழியே செல்வேபொருளேசுகமடைந்தார்
குணமேமனமேயருளுடைய குன்றேபமுதேதந்தவனும்
இணைமேற்றயிலும்மணிவிளக்கே யரங்காவடியேற்கிரங்காயே. ௨

உரமேபரமேயுடலுயிரே யூனேயறவேயுறவேயுள்ளத்
திரமேதவிப்போர்தமக்கிரங்குந் தேவேசிறப்பேயமிருக்கும்
பரமேகதியேயெனக்கிரங்கும் பண்பேயிமையோர்பணியும்வினைக்
கரமேயமுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௩

வளியேன்றமியேன்மனத்துளதி மயமேயிறைவா திருநாமம்
தொழுவேன்வழுவா திருநாத்தான் றுதிப்பேனைவாற்றணையடிக்கீழ்
விழுவேனுபயபதந்தெளியேன் விழிமேற்கண்ணீர்சொரிந்திடச்சேர்ந்
தழுதேனவர்க்கேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௪

மெய்பாவினைகளொருகோடி யறியேன்செய்துமிருந்ததனால்
சேயோகியதேவுனதுபத மேவாதிருந்தேன்வினையாய்

பொய்யாகியபேருடலதனைப் புகழ்ந்தேனழியாப்பொருளெனவே
ஐயாதுய்யாகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௫

விரிவாகியபேருலகமதின் மேதாவியர்சொற்சாத்திரத்தை
பரிவாய்ப்படித்தேன்பயனுணர்ந்து பதமேற்பணிந்தேன்பலன்பெறவே
குருவாய்வந்தெனதுகுறைகுறையைத்தீர்த்தாள்குணமுடையாய்
அருவாய்வருவாய்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௬

துன்பப்பிறவிக்கடலதனைத் தொலைத்தேநீந்திக்கரையேறி
இன்பப்பெருக்கானந்தவெள்ள வெளியேயருந்தற்கிரவுபகல்
தென்பற்றுன்றன்னிருநாமந் தினமேதுதித்தேன்சிற்றறிவால்
அன்பிற்கழுதேகதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௭

குழியேன்கொடியார்மடியுறவைக் கொள்ளேன்விள்ளேனொருநாளும்
பிரியேன்பெரியோர்தனைக்கண்டால்பிணங்கேன்வணங்கியிணங்கிடவே
தரியேன்தமியேனுனதருளைத் தாராதொழிந்தாற்றரணிமிசை
அரியேவறியேன்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௮

பழகேன்சிறியாரிணக்கமதைப் பாவங்கருமின்னார்தனைக்கண்
டிழந்தேனென்றனிருதயத்தி லெளியேனின்னைப்பிடித்தபடி
கழுதேன்வழுகேன்கிருபைசெய்வாய் நாராயணனேவனமாரு
அழுகேபுழுதுக்கதிபெறவே யரங்காவடியேற்கிரங்காயே. ௯

என்னாசையினாலிரவுபக லிதுவேதொழிலாயிளமுலையார்
தன்னால்மயங்கியறிவழிந்தேன் றாமோதரனேகிருபைசெய்வாய்
உன்னாலடியேனுலகுய்ய வுரைத்தேன்றமிழைப்பொருபஃதாய்
அன்னாள்முன்யானையைக்காத்த வரங்காவடியேற்கிரங்காயே. ௰

இரங்கப்பத்துமுற்றிற்று.

மெஞ்ஞானஜோதிமயம்.

காணாதகாணவே மோகினிபினுருவமாய்க்
காசினியில்வருகவிலையோ
கானகந்தனிலுனது பாததூள்சிந்தவே
கருங்கல் பெண்ணாகவிலையோ
தோணுதபோலவே கஞ்சனுடபோதஞ்
சூக்ஷிபின்முடிகவிலையோ
தொல்லுலகமியாவுமுன் னுந்திபிற்காணவே
சூத்திரப்பிணித்ததிலையோ

நானுமல்கவுரியின் முனற்பரியதாக்கியே
நரிதனைக்கொணரவில்லையோ
நரசிங்கரூபமாய்க் கற்றூணிடைத்தோன்றி
நல்வினைவிளக்கவில்லையோ
வினைவென்மனம் பணியும்படிக்கருள்செய்
வித்தைகளுனக்கருமையோ
வேதாவையின்றருள் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே. ௯

ஆருறவுயாருதவி யாருதுணையாருப்ளை
யம்புவியிலெந்தனுக்கு
ஐம்புலநொடிங்கியே யுன்பதம்வணங்கவே
யறிவெனுந்தீபமேற்றி
சேருமிடமேயறிந்து தென்னைச்செறித்துலகில்
திவ்யசம்பன்னவாழ்வும்
தேசசமயங்களும் பலமனிதர்செய்கையுஞ்
சிந்தைதனில்யான்மறந்து
பாருலகிலுன்னிரு பதாம்புயத்தடிமையாய்
பண்பிற் பணிந்தேற்றவும்
பத்திவிசுவாசமாய் நம்புமடியேனுடைய
பழவினையொழித்தாளவும்
மேருவிகரானபுஜ கருடன்முதுகேறியென்
விழிக்கெதிரெழுந்தருளுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே. ௰

எவர்சிறியரெவர்பெரிய ரெவர்நீதியரெவர்மடைய
ரீவுள்ளமனிதரெவரோ
என்றுலகிலவரிடஞ் சென்றுறுதெண்ணிய
யிருளானபலவினைவினால்
தவறிலாத்தவமெனு முயர்ச்சியைத்தேடாமல்
சமுசாரசாகரத்தில்
சார்வதாகாலமும் மூழ்கிகிலைகொள்ளாது
தத்தளிப்பதுனாயமோ
நவநீதசோரவன மாலிகாபரணவரி
நாராயணாமுகுந்தா
நாரதாதியர்பரவு தாமோதராவேத
நாதாந்தபஞ்சாயுதா
சிவாமுடனடிமையை யிரட்சிக்கவேகருட்ன்
மீதேறியென்முன்வருவாய்

வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞான சோதிமயமே.

ஆமைகேணிநும்வா லணிப்பிள்ளைகொம்பிலிடும்
ஆமென்றபழமொழிகள்போல்
அங்குரீயுந்தமிய னிங்குமாங்கடிமீட்த்
தலையுந்துரும்புபோலும்
ஊமைகண்டவேகையுறு சொற்பனம்போலுமே
லொன்றுமுறையாமலடியேன்
உபயசெங்கமலபத நாடியுற்றதுவும்நீ
யுண்மையுறை யாதகுறையும்
சிமையிற்சொல்லிலோ யாவருநகைத்திடுவ
ஸ்ரீராமராமராமா
தேகியென்பார்க்குதவி செய்யாதபேரில்லை
திருமருவுசார்வபூமா
விமமதகற்றியென்னை ரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன்வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞான ஜோதிமயமே.

மண்ணாசைபெண்ணாசை பொன்னாசைமூன்றையும்
வாக்குமன நோக்கவில்லை
வைகுண்டவாசனே நின்றதிருவடிக்கடியர்
மைந்தன்யான்வாழ்த்துதற்கு
கண்ணாரவேதாரை தாரையாயோடிட்க்
கைகுவித் தூணதுநாமக்
கனவின்மறவாமன் முறையோவெனக்கூவியுங்
கருணைபுரியாதிருந்தால்
என்னாலுனக்குநா ளடிமையாகுவே
னினிப்பிறவி தீர்வதெப்போ
இரவுபகலுன்பெருமை யுன்மகிமையுன்னாம
முண்ணாதிருந்ததுண்டோ
விண்ணாடாகமகிழ செங்கருடன்மீதேறி
விழிகளித் திடவருகுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே.

ஆசைபெனுமகழியும் மோகவலையாமதிலும்
அஞ்ஞானமிக்குரகரும்
ஆணவமலச்சேனை யணுகுதீவினையாச்சு
யைம்புல நிலத்தின்மேவி

வாசமுடனும்பத மலர்க்கடிமையாமனதை
வகைமோசமாய்ப்பகைத்தே
வளர்கின்றவிவேக தூசர்கைகொண்டார்கள்
வாளுளவத்தொழிக்கேதென்
நேசம்வைத்தனிமகிழு மோசமாங்கோட்டிடையும்
நிலையிலாமகழியரசும்
நின்கிருபையாற்பொடிசெய் தன்னடிமையாகவெனை
ரட்சிப்பதுன்பாரங்காண்
விசுபுகழ்செங்கருடன் மீதேறியேழையேன்
விழிகளித்திடவருகுவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞான ஜோதிமயமே. ௬

அகமொன்றுபுறமொன்று யன்பர்க்குரைக்கவென்
னலமனங்கூசவில்லை
அற்பரைக்கண்டாலு நேசித்துநிதிவாங்கு
மாசையளவிடுதற்கில்லை
ஜெகமெனுங்காட்டினிற் கலியெனும்புலியுனைச்
ஜெயிக்கவென்றாற்றிடமிலை
தினமுய்த்தேம்பியென் னிருவிழியின்மழைமாரி
சிந்தினேன் சிந்தைநொந்தேன்
சகமுறுவதெந்தநா ளாதிநாள்யானையைச்
சொல்லாலிரக்கியாண்ட
துரிதமாய்நின்கரத் திரியாற்பழவினை
தொலைத்தன்பர் கூட்டத்தினில்
விசிதமுடனெந்தனை யிரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன்வருவாய்
வேதாவையீன்றருள் சீதாபிராமனே
மெஞ்ஞானசோதிமயமே. ௭

சொன்னதெல்லாமுனது செவிகேட்கவில்லையோ
தூர்த்தனேற்றுறுதியிலையோ
தொலையாதகலிபோக்க வருநோக்கமில்லையோ
தூர்த்தனேற்றருதியிலையோ
அனைமுகநோக்கியே குழந்தைபாலுணலையோ
அன்னையிறந்ததிலையோ
அருந்துமுகவிசெய் தாளிலையோவடிமை
யென்மனமிரும்பாயதோ
இன்னமும்பக்குவ மெனக்குவரவில்லையோ
இனிபெற்றநாளுளதோ

ஈசனுரைவேனுமோ தாசர்பிழைவேனுமோ
என்னுடல்தளர்ந்தகனி
வின்னமாகாமுன்ன மேகருடன்மீதேறி
விழிகாணவந்தருள்செய்வாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞான ஜோதிமயமே. ௯

காகமானதுபார்ப்பின் மென்மேலுமேதெனக்
காட்சிபெறுசாட்சிபோல
கற்றவர்களற்றவர்கள் மற்றவர்களுக்கெளிய
கடையினேன் கவிசொல்லியும்
தோகையினடனசங் கீதமறுவாசனைச்
சுவைதேறலிவைகள்யாவுஞ்
சுகமெனுந்தொல்லுலகில் வாழ்வென்பரிலையெனாஞ்
சொந்தமெனமிகாப்பியும்
தாகமாயெனதுநா னென்மகிழ்வின்மூழ்கினேன்
தமியனுக்காவதுண்டோ
சரணகமலங்களிற் பாமாலைசாத்தியென்
சஞ்சலமெலாமொழிந்தேன்
மேகநிகர்வண்ணனே கண்ணனேகருடன்மீ
தறிவிழிகாணவருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே. ௧

ஆதியந்தமுமிலாச் சங்கரனுநான்முகனு
மகிலம்படித்தழிப்பார்
அனந்தகல்யாணபரி பரவாசுதேவனே
யன்னைபோன் மன்னுயிர்க்கும்
நீதிநெறிதவராத தாசாதிதாசர்க்கும்
நீயபயசமயமென்ற
நேசர்க்குமுன்னின் விரட்சிக்குமரட்சகனி
னின்னடிமையாகினேனே
சோதியேசோதனைசெய் யாமலைம்படையுடன்
றுளசிமணிமார்பிலங்க
சந்தரவிலக்குமி சமேதராய்ப்பூமாரி
துந்துமிமுழக்கத்துடன்
மேதினியிலெந்தனை யிரட்சிக்கவேகருடன்
மீதேறியென்முன் வருவாய்
வேதாவையீன்றருட் சீதாபிராமனே
மெஞ்ஞானஜோதிமயமே. ௰

மெஞ்ஞானசோதிமயம்-முற்றிற்று,

உ

ரகுராமப் படலம்.

உலகமெங்கும்போர்வனந் தன்னிழல்கேணியது
ளுள்ளன சிங்கமொன்று
ஒன்குமதயானையோ ராளோனாத்தவவ
மேனுடியத்தூரவில்விழ்த்து
பலமுள்ள அருகம்பேர் பற்பிகால்தத்தி சோதில்
பட்சிபோனாசலனாய்ப்
நலமற்றமனிதன்னத் தேகனிபடிக்கவெ
ளுவிலுற்றேன் அபிதா
காகரிசத்திரெறுபி நல்லாயமேற்பெ ாள்ள
ரன்கண்டசமுசாரமே
இலவுகாத்திட்டகிளி யாகமன்மறைகள்முறை
யிருமலர்ப்பதமருளுவாய்
என்றுமடியார்கள் கண்ணனதேவனே
யென்னையாள்ரகுராமனே. ௧

அரசனருள்பெற்றபேர்க் கல்விலையொருவர்பகை
யாவதிலைகுறையொன்றிலை
அதிகாரம்மேன்மையில் லாததிலைதிமலையோ
டியாவரும்வணங்காதிலை
முரசமுடன்வாத்திய முழங்காதகாலமிலை
முறைமைபறநெறிதவறிலை
மூர்த்தன்பதிசையெனிலு மிதிலைக்கினச்சையிலை
மோட்சத்தில்வாஞ்சையாகி
கரசகுணைபிசாச பாசினையளித்தளிசெப்
சலசமேயர்சனமாதவா
தனியான திருநாம மினிதாய்நினைக்கவும்
ஜன்மதிவினைதீர்க்கவும்
இரவுமதிதுதிபரவு பெரியகுலதெய்வமே
யேழைமேற்கருள்செய்தாள்வாய்
என்றுமடியார்கள் கண்ணனதேவனே
யென்னையாள்ரகுராமனே. ௨

விதியினால்வருவதல்லாது வேறொன்றில்லை
மேன்மையோர்சொல்லிதென்றால்

மேதினியிலுன் றனைப் பூசிப்பதேன்யாக
  வேதங்கள்யாசிப்பதேன்
மந்த்ரயிருல்விதியனை வெல்லாமென் றுமுன்
  மார்க்கண்டர் சரிதையோகம்
வான்சித்தாறசிவையடக்கியாவருமகிழ
  வயதுபதி னாறுபெற்றார்
சுதியினாலன்பகத் தென்மனக்குறையெலாஞ்
  சொல்லிமுறை யிட்டுருகினேன்
தொல்லுலகினாலந்தெனைச் சல்லியஞ்செய்யாமல்
  சுகமுடனிருக்க வருள்வாய்
எதிரியாகித்தெனைக் கைவிடுதனீதமோ
  எழையுன் னடிக்கடிமையாம்
என்றுனுமடியார்கள் கண்ணுனதேவனே
  யென்னையாள் ரகுராமனே. ௯

வெட்டவெளிதன்னிலே கட்டிட்ட மேகத்தின்
  மின்னலுண் டானவகைபோல்
மேதினியிலுற்பவத் தேகமதிலுன் னுடைய
  மெய்யரு ளிருக்கிறதினாலே
விட்டைவெளியாகிய யதிலைத் துணைக்கொண்டு
  நோற்றிமத் திப்பார்வையால்
நீயென் றுநானென் று நவிலின்மந்திரமென்று
  நினைவதனையுடனறுத்து
திட்டமுனவுந்தனிரு திருவடிக்கடிமையாய்த்
  தெரிசித்து முத்திபெறவே
திரிவிடுமெருகுபோ லனுதினமுநாடியே
  தேடிமனம்வாடிநொந்தேன்
இட்டகுலதெய்வமே பையரவிற்றுயி
  லிராங்காவிராங்கவேனும்
என்றுனுமடியார்கள் கண்ணுனதேவனே
  யென்னையாள் ரகுராமனே. ௰

கோணிலைக்கிற்பிரான் மேருமேருவுங்
  குணமிலாத்திரணமாகும்
குருவினைக்கிற்கல்வி ஞானமாமோனமாங்
  கோதிலாமோட்சமாகும்
வானினைத்தலகில் மும்மாரிபொழியுமழை
  மாறின்வன்மாரிகழியும்
வையம்படைத்தொழியும்வகையிலலே
  வாணிபருளிற்கல்வியாம்

நீவினைக்கிற்கொடிய கர்மவினையிற்றுமோ
வின்னதரு வின்னமின்ன
சேரவில்லையோவசட னிசமிலாப்பாவியேன்
மின்னடி மறைந்தனன்டோ
எனிவினைக்கர்மவிம் மாய்கைக்குள்மூழ்கினே
யென்றென்னை மீட்டாளுவாய்
என்றுளுமடியார்கள் கண்ணுனதேவனே
யென்னையாள் ரகுராமனே. ௫

ஆசனும்போரிலி னுண்மனக்கள்ளனை
யன்பெறு மணிக்கயிறுகொண்
டசையாதிருக்கியுன் னடிமலர்க்கடிமையா
யாக்குவே னென்னடவிரும்
பரிகள்ளபாட்டையில் வருபோதுபாழான
பசியாம் பெருங்காறழினால்
பதறிவெரிமூன் றிடச் சைதன்யவாடவப்
படுமனக் கள்ளனோடே
புரியதாமனமெனும் பாசப்பொடிப்பொடிப்
போயதாலென்றுகூட்டும்
பொருளில்லையருளில்லை வெண்ணெய்ப்படிமூன்றுழி
போனகதை போலாகினேன்
இரவுபகனின்றுமை சிவனஞ்செய்யாம
லென்றைக்குன் னளாவனோ
என்னுளுமடியார்கள் கண்ணனதேவனே
யென்னையாள் ரகுராமனே. ௬

செப்பமுளமானிடர்க் கொருநூறுவயதிற்
செப்பாதிமித்திரையிற்போஞ்
செய்குழவிபாலரிற் பத்துவயதேகிடும்
ஸ்ரீபாசையொருபத்துமாம்
முப்பதாமாண்டின்மேற் மூன்றுசையற்றரிய
முத்திக்குகர்த்தபொருளை
முறைமைபுடனுவெது முதன்மையென்றவ்வைதரு
மொழியின்படிக்கிசைந்தே
தப்பிதபலாமனுன் றுமறைச்சரணினை
தவிர்த்ககமிருக்கிவாழ்த்தி
சஷ்டாங்கஅஷ்டாங்க மாகப்பணிந்தெனது
சஞ்சலமிலாமுரைத்தேன்
இப்பிறவிதீர்த்திட வினிப்பிறவிவாராம
லென்னையாட் கொண்டருளுவாய்

என்னாளுமடியார்கள் கண்ணான தேவனே
யென்னையாள் ரகுராமனே. ன்

உதயாதிகாலத்தி லொருநாழிகையுன்னடிமை
யுன்னுமமுறைபாமலே
ஓயாதசாண்குழிக் கிரைதேடியோடியே
யுயிருடன் செத்தபிணமாய்
வந்தயாதிமுதலான கொடுமைக்குடன்பட்டு
வஞ்சமன நெஞ்சனாகி
பட்டிக்குலாபர்பாற் சென்றுசமயம்பார்த்து
வள்ளல்நீ யென்றுவாழ்த்தி
புதையலீந்தெவரெனப் பூரித்தவர்தரும்
பொருளையிருகைக்கொடேந்தி
புத்ரதாராதிய ருடன்மகிழ்விலாழுமிப்
புன்மையணு காதவண்ணம்
இதயமலர் தன்னிலே யிருபதாம்புயமலரை
யென்றுயான் கண்டுய்வனே
எந்நாளுமடியார்கள் கண்ணான தேவனே
யென்னையாள் ரகுராமனே. அ

அம்புவியில்யாவரும் கண்காணவுன்னடிமை
யாக்கியெனை யாள்வதென்றோ
ஆசாபைசாசத்தைத் துரத்தியுன்னருளாலே
வமுதங் கொடுப்பதென்றோ
கும்பலாய்வருகின்ற வினையுனது மகிமையாற்
குறைந்தழிந் தொழிவதென்றோ
குணமிலாவைம்புலக் கயவரின்கருணையாற்
குலநாசமாவதென்றோ
சம்பமாமைம்புயச் சரணமலரன்பினுற்
றரிசிக்கு நாள்களென்றோ
சாகாச்சம்சாரமொழியீதெவறோதாசர்
தப்பொடுபிறப்பதென்றோ
இன்பரிற்றுன்பவின் பங்களில்லாதநீ
யேழையைவதிப்பதென்றோ
எந்நாளுமடியார்கள் கண்ணான தேவனே
யென்னையாள் ரகுராமனே. க

கள்ளுண்டுதள்ளுண்ட பேர்போல்மதமேறு
காரானைபோர்பித்தர்போற்
காடென்றுநாடென்று மேடென்றுதெரியாமல்
காசினியெலாமலைந்து

முன்னுண்ட கள்ளமன மூடன்கணில்லாத
  மூர்க்கவஞ்சகனுமெனை
மோகவாரிதியின்மூழ் காமனின்மயலான
  முத்திவழிகூட்டிநாடி
தென்னுதமிழ்வாணர்சிவ னடியாரின்தாசர்போற்
  சிறுவனுக்கருளளித்தால்
தேவாதிதேவமன திவ்யகுணனுமனே
  திகழ்ஞானவாசுதேவனே
என்னுக்குள்ளண்ணை போலெங்குமாயாவுமா
  யிருவினை தொலைக்குமாசே
என்னுளுமடியார்கள் கண்ணுனதேவனே
  யெனையாள் ரகுராமனே. ௰

ரகுராமப்பத்து முற்றிற்று.

கோவிந்தப் பதிகப்பத்து.

நாகமேற்பள்ளிபா யோகநித்திரைகொள்ளும்
  ராகவமுகுந்தனுமன்
நாராயணனென்று பாராயணஞ்செய்து
  நாளுந்துதிப்பதற்கே
தேகமேநீர்க்குமிழி சிந்தையோபலவிதஞ்
  செய்கையோவெகுவினோதம்
செப்பும்வசனங்கோடி தப்பிதமிதற்கென்ன
  செய்வேனினி யாரைநோவேன்
பாகனையமொழிமாதர் மோகவலையிற்சிக்கி
  பஞ்சென்ன நெஞ்சுழன்று
பாழானநாமத்துள் வீழாமலென்றனைப்
  பட்சம்வைத் தாளுதற்கு
வாகைமேற்கொண்டபுய செங்கருடன்மீதேறி
  வல்வினையகற்றவருவாய்
மாயாஅவதாரனே சீதாபிராமனே
  மாதவாகோவிந்தனே. ௧

கருவாய்க்கருப்பையிற் கண்டுண்டுதசமதிக்
  காசினியிலேபிறந்துக்
கருணையுடனுனதிரு வடிவமலர்ப்பணியாத
  காமினுடல்கசவும்

உருவாபெணைத்தங்க ளன்னைதந்தைபாருந்
　வுறவினம்வெறுத்தேகவும்
உலகவாழ்விற்பழகு பலமணிதர்பேசவும்
　உறுகலனையலைவீசவும்
அறுவானவழியினர் போலமதிமோசமா
　யாழ்விற்கரைத்தபுளியாய்
அவத்தில்வாணாள்கெடுத் தலையுமடிமைக்குனது
　அடிமலரடிததாளவே
மருவீசுமாலைபுய செங்கருடன்மீதேறி
　வல்வினையகற்றவருவாய
மாயாவதாரனே சீதாபிராமனே
　மாதவாகோவிந்தனே. ௨

பொல்லாதவேலையோ சொல்லாதகாலமோ
　பூர்வம்யான் செய்தவினையோ
பூதம்பதத்தில்வளர் மாமாயையாசையாற
　பொய்யான வாழ்வைநம்பி
உல்லாசமாகவே உண்பதுமுடுப்பதவு
　மோயமே லிரவும்பகலும்
உறங்குவதல்லானுனது திருநாமமந்திரத்தை
　யுன்னுவதெல்லாமறந்து
எல்லாமழிந்தவர்கள் போனும்வாயாற்பிதறி
　யீடொருவ ரில்லையென்றே
இறுமாந்து திரிகின்ற வேழையேயென்னைநீ
　இப்போதுரட்சிக்கவே
வல்லாண்மையானபுப செங்கருடன்மீதேறி
　வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
　மாதவாகோவிந்தனே. ௩

போகபாக்கியமாக யில்லறமிருந்துன்னை
　பூசைபுரிவோரனந்தம்
புலனைந்தடக்கியே மலையேறிமாதவம்
　புரியுமுரியோ ரனந்தம்
சேகரமதாகவே நல்லடியராய்வந்துன்
　சேவைசெய்வோரனந்தம்
திக்குவேறில்லையென் றக்கரையினுன்னும
　தீர்க்கங்கள் வோரனந்தம்
மோகமுடன் அஷ்டாட் சரத்தையுளம்வைத்துன்னு
　மோனமுனிவோரனந்தம்
முத்திக்குயாவரும் பணிவாயான்முழுமுடன்
　முண்டகச் சரணருளவே

வாருபெருசெங்கருடன் மீதேறிநாயினென்
வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. ௪

உந்தனுக்கொருகாசு கற்பூரமலர்மாலை
யொளிதீபமிஃதுசெய்தால்
ஒலமிட்டலருவேன் தர்மபரிபாலன
முகந்துசெய் வோரைமதியேன்
நிந்தனைப்பேச்சலா லுந்தனற்றிருநாமம்
நினைவிலும் பேசியறியேன்
நேமமல்லாமல்நிதி யாசைகொண்டேனலால்
நின்மதம் பூசைகுறியேன்
இந்தவிதமெனதுசெய னந்தநந்தாவேழை
யீடேறவென்னநவில்வோம்
ஈராறுநேமனே சேஷகிரிவாசனே
இப்போது தடைகார்க்கவே
மந்தாகினிக்குநிகர் செங்கருடன்மீதேறி
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. ௫

காட்சியாய்நின்னுபய கமலப்பதந்தன்னைக்
காணும்வகை தேடும்வழியுங்
காணுமனக்குறைவி னுர்கவலைகொண்டயர்வு
கண்டுநின் றேமாறியும்
வீட்சணகடாட்சமூட மெய்யன்பருக்கடிமை
வேலைசெய் யேசறியும்
வீணனமாயமோ கத்தினுல்வாளுள்
விடுப்பதோ மெய்க்காட்சியே
தாட்சியாய்க்கோடிபிழை செய்தாலுமெள்ளளவு
தாட்சணியமென்பதில்லையோ
சர்வசனரட்சக தயாளுநீயல்லவோ
தற்காக்கநல்லசமையம்
மாட்சிபெறவாச்சுதென் றேகருடன்மீதேறி
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவா கோவிந்தனே. ௬

ஆறுமென்கொடுமை பனியாபமனியாய
மகிதலத்தி லெவ்போலில்லை

அனிதமாய்மதனுக்கு நமனுக்கும்வாளு
ளவந்திலொப்பித்ததல்லால்
ஊனுருமுடலைவிட் டுயிர்போகுமுன்னமுன்
னுலவாப்பெரும்பதத்தை
யுறுமறிஞரருளினற் கண்டுண்மைநாடா
துலைததபெறுமாய்கையதனுல்
நானனதென்றகொ ராணவப்பேய்கொண்டு
நன்மார்க்கவழிவிட்டுவினை
நாயினுங்கடையான நாயினேனுன்கருணை
நாடினேனுட்செல்லுமுன்
வானாடர்மன்னாடர் மணியவெங்கருடன்மிசை
வல்வினையகறறவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவாகோவிந்தனே. எ

சீலமுளசேஷசய னதிருப்பாற்கடற்
செல்வனே தசரதற்குச்
செல்வமகவாய்வந் துதித்தஸ்ரீராமனே
சீதாமனோகரத்தாய்
கோலமுள கலியாண ராமாநெடுந்தனுக்
கொண்டகோதண்டராமா
குணமாதுவாக்யபரி பாலராமாதனுக்
கோடியணைசெய்தராமா
அலகாலத்தைநிக ராவணதியர்தமை
யழித்தசெய ராஜசேராமா
அரிபிரியைசானகிக னிட்டனுடனமுதுன்
டயோத்திபட் டாபிராமா
மாலையணிமார்பனே யென்னையாள்கருடன்மிசை
வல்வினையகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
மாதவாகோவிந்தனே. அ

உலகரட்சகனுநீ யுயிர்களரட்சகனுநீ
யுன்செயலாமொன்றிலை
உந்தனற்கிருபைதா னெந்தனுக்கில்லையோ
வுயிர்த்தொகையில் நானில்லையோ
மலையமலைபோனெடும வல்வினைவளர்ந்தென்னை
வாட்டுதேபேபாட்டுதே
மாருதவறுமைதீ மூட்டுதேபிறவிநோய்
வருமென்றபயமாட்டுதே

கலவமாதாணமனமொருநிலையினிற்கவலை
  காமிக்கோர்நிற்குமில்லை
கைவிடிலோமின்னன்ப ருள்ளேனம்பாரினிக்
  கைகாப்பாரமனிதரா
வலிமைபெறுசெங்கருடன் மீதேறிகல்காண
  வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
  மாதவா கோவிந்தனே. ௯

தக்ககபோகமாய் வளர்கின்றபிருகினைத்
  தொடரினுநு—அருவமாய்
தோகையர்கண்மோகவலையர்முலைமேலாசையும்
  சொர்ணமலைமேற்பாசமும்
அக்கிரக்கொடியர்பா லேசவிசுவாசமும்
  அறிமையறியார்நேசமும்
ஆனந்தமென்றயா னகமகிழ்பாசமும்
  அநிரந்தமனவாசமும்
தக்கயிகபோகமென றக்கெறுமனத்தையான்
  தமது திருவடிபினீழல்
தாழ்ந்திவாழ்க்காமலிருளானமாய்கைதனிற்
  றமிகிய வலைந்தழிந்தேன்
மக்கள்தொழுவாழ்கின்ற கருடன்மீதேறியென்
  வல்வினை யகற்றவருவாய்
மாயாவதாரனே சீதாபிராமனே
  மாதவா கோவிந்தனே. ௰

கோவிந்தப் பதிகப்பத்து-முற்றிற்று.

சிந்தைகுடிகொண்ட பதிகம்.

—(*)—

ஆசிரிய விருத்தம்.

சங்கையறவேதாந்த சித்தாந்தநீதிநெறி
  சாத்திரமெலாமுணர்ந்த
சாதுசங்கச்சனி தானத்தடைந்துயான்
  முழ்ந்தடியினமுடிகுடியே
பங்கசவிலோசன பாரதாமகீர்த்தனம்
  பாடாயவிருமந்திரம்
பன்றுமனுன்லபய பதமலர்க்கூறியம்
  பண்ணுமல்லின்னுணமாய்

சங்கணியுமாதர்தோள் சார்ந்திணைச்சேர்ந்து
சஞ்சலக் குழியிலாழ்ந்து
தலையெடுக்காமலேயை வறுமையாய்ச்சிறுமையாய்ச்
தமியே னலைந்துதிரிந்தேன்
திங்களணிபணிவதன சங்குசக்ராதரா
தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. ௧

சுயமானசாயுச்சிய பதவியானடையவே
தொல்லுலகி லுன்னிநிதமும்
துதிசெய்துமதியினுக் குறுதிபொழியிவ்வேளை
சொல்லுமென் றுனைநம்பினால்
அயனுரைத்தபடி மயனுகவதுபோக
மாமென்று மவ்வவர்வினை
அனுபவித்திடவேண்டுமென் றுநெறிசொலுமறைக
ளலறிமுறையிடுதலாலே
பயமானபாவியேன் பயனென் றருமையாற்
பணிந்தாதிமூலமென்றே
பாடினேன்நாடினேன் செய்வதொன்றோர்
பதிதனைக் கைவிடாதே
ஜெயகருடகேதனச் சங்குசக்ராதரா
தீவினை யகற்றியருள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே உ

எந்தனுக்குப்பாக்ய மீந்தவற்குன்னரு
ளிருக்குமே யின்பனாவியால்
எனையாள்வதருமையோ வென்தள்வனுன்மைந்தனை
யென்பிறவி நீக்கலரிதோ
சொந்தமுளதாசரொடு பந்தப்படுத்தினின்
றுண்டனென் றுள்வதரிதோ
தொகைப்புரட்டோவுனு லாகாதகாரியந்
தொல்லுலகில் சொல்வதுளதோ
கந்தமாதன்முனிவ ரரிபிரமர்யாவருங்
கைகுவித் திடுதெய்வமே
காசினியிளம்வற்ற தொல்லையிற்சேர்த்தெனைக்
கண்கலங்கச் செய்தனை
சிந்தைவேகத்தின்முன் வருகருடனேறியென்
தீவினையகற்றியாள்வாய்

சீதாபிராமனே மாதாபிதாவெனச்
  சிந்தைகுடிகொண்ட குருவே. ரு

சந்ததஞ் சந்த்ரனைக் கண்டவிருள் போலவும்
  தழல்கண்ட சருகுபோலும்
தபனனைக்கண்டபனி போலவுஞ்சிங்கத்தை
  தந்திகண் டிடுதல்போலும்
வந்தனைசெய்யுந்தா சரைக்கண்டுவாழ்த்தவகை
  வராத மூடர்போலும்
வாடினேன்மாபாவி தேடுறுவண்ணநீ
  மனதுவைத் தாளவேணும்
சொர்க்கமுளவின் வடுமை யிந்தவினையூடேபோய்
  சோரமலாளாவிடிற்
றுலையாதவிந்தவினை யுனக்குவருநானசொன்னேன்
  துரோபதைதனக்கருள்செயுஞ்
செந்திகிரியுஞ்சங்கு தங்குபுயகாருண்ய
  தீவினை யகற்றியருள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
  சிந்தைகுடி கொண்ட குருவே. ௬

புக்காதகருவில்லை புசியாதநீரில்லை
  புரளாத தொழிலுமில்லை
புண்ணியஞ்செய்வதிலை பிழைமோசப்படுவதிலை
  புலையனென் காரியமில்லை
மிக்கானவேத முதல்வனுங்காணாத
  விக்ஞான ஜோதிமயமே
மெய்யாகுமின்னுபய செய்யாதனைப்பைய
  வித்தைமன வீட்டிருத்தி
அக்ஞானமாமட வியைச்சுட்டெரித்ததி
  லகங்கார மிருகமோட்டி
ஆசைவலையைக்கொய்து தாசாநுதாசனு
  றைம்படிக் கருள்செய்வாய்
திக்காருமில்லைநீ கதியென் றுநம்பினேன்
  தீவினை யகற்றியருள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
  சிந்தைகுடி கொண்டகுருவே. ௭

மூவாசையுங்கொண்ட வென்கொடுமைபோலிந்த
  மூவுலகிலொருவருண்டோ
மூதறிவிலாமலே பாதகத்தொழில்செயு
  மூர்க்கனெனை யன்றியுண்டோ

பாவாசுபாடகற் பாவோடுவார்கள்போற்
பகர்பேதையன்றியுண்டோ
பணங்காசுதுணிமணிக ளொன்றுபகலிரவும்
பறப்பவர்களன்றியுண்டோ
நாவாசையானுனது திருயந்திரத்தையென்
னாவினிலுரைத்ததுண்டோ
நால்வர்சபைகூடியே யின்புகழ்ப்பசனைசொல
நான்செவிகொடுத்ததுண்டோ
தேவாதிதேவனீ யறியாததொன்றில்லை
தீவினையகற்றியாள்வாய்
சீதாராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. ௬

உடலைவிட்டுயிர்பிரிதலின்றைக்குநாளைக்கு
வொருகணத்தென்பதில்லை
உலைவாயின்மெழுகென்ன உருகிகண்ணீர்பெருகி
யோடியுனைதேடியோடி
மடைவாரியிரென்னவாய்வரண்டனுதினம்
வாடிமனைவாழ்க்கைதேடி
வந்தபின்கொஞ்சபோகத்தில்விளையாடிநன்
மனைமக்களைக்கூடியே
இடைமீதிருந்தபட்டாடையையிழந்தமதி
யீனர்போற்காலமெல்லாம்
இப்படிகழித்தவன் சீகிடைக்குங்கன்ம
மென்னவுன்னின்பெரியசோ
திடமுடனேதடதடென கருடன்மிசையோடியென்
தீவினையகற்றியாள்வாய்
சீதாராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. ௭

மன்னவாகேசவா நாராயணாகௌரி
வனமாலிவாசுதேவா
மாநிலமளந்தவா கனகூர்மநரசிங்க
மாதவாமணிமாலையா
என்னுமின்னாமமே பன்னினானுன்னிது
வெள்ளளவிரக்கமிலையே
என்னிடவதிஷ்டமுனையோகொடியபாவியா
னென்னமுன்னாட்செய்வினையோ
அன்னைதந்தையர்கள்போ லாதரிப்பவர்களுனை
யல்லாமல்வேறுகொள்ளோம்

அபிஷேகமுடிகொண்டு வனுமச்சமேதரா
யாசுபுரிவிரசையாசே
சின்னமில்லாதவட் டாக்கரத்தெய்வமே
தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. ௮

நெஞ்சைப்பிளந்திராணி யன்றனைக்கொன்றதும்
நெறியுள்ள தசரதற்கு
நீண்டசேடன்சங்கு திகிரியபிரியா
மேகமெனப்போந்ததும்
வஞ்சகத்தாடகைச் சுவாகுவைமுடித்தவரு
வழியினிற்பெண்ணானதும்
மங்களமதாகவே திங்கள்குலசானகியை
மாலையிட்டேர்புக்கவும்
அஞ்சியேசிற்றன்னையார் காடடைந்துமறை
யந்தணர்க்கருள் தந்ததும்
அழகானதஞ்சைவடி யுற்றுசவரிக்கரு
ளளித்ததஞ்சயமுற்றதும்
செஞ்சிலைக்கோதண்டராமனேமெய்யெனிற்
றீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடி கொண்டகுருவே. ௯

அணில்மேல்வரும்கோம்பி தன்னில்கொதிக்கநீர்
ராசினையாக்கவில்லையோ
அந்தரந்தனின்மேக முத்தற்கலாபங்க
ளாடிமகிழ்கூடவில்லையோ
துணிவாகுமாமீசன் சிந்தைகண்பார்வையாற்
றேன்றியாருக்களில்லையோ
தவிவாகயுன்றனுக் கடிமைஞனபின்
றெல்வினைதுடைப்பதரிதோ
பணிமாசுகாதகற் பாறையோபசையற்ற
பச்சைநிறமற்ற மரமோ
பாமசிவனணிகின்ற பாம்புவாய்ப்புற்றேருவிப்
பாவியெனசெவியிரண்டும்
திணிகொளின்னிருசெவிக் கென்சொல்வரவில்லையோ
தீவினையகற்றியாள்வாய்
சீதாபிராமனே மாதாபிதாவெனச்
சிந்தைகுடிகொண்டகுருவே. ௰

சிந்தைகுடிகொண்டபதிகம்-முற்றிற்று.

ஆதிஸ்ரீரங்கப்பதிகம்.

கஞ்சாவுமபினியுஞ் சாராயவகைகளும்
கள்ளுமாமிசமும் வைத்து
கண்மூடிபெண்ணாசை யைக்கருதிமிட்டையிற்
காத்திருப்பார்களந்த
நஞ்சானபிரர்வஞ்ச மாயத்தைநிசமென்று
நல்லறிவழிந்துநிசமும்
நன்மார்க்கவழியெலாந்துன்மார்க்கவழியென்று
நம்பிக்கும்பிக்கலைந்து
நெஞ்சாரவளவற்ற களவுகொலைகாமங்கள்
நீங்காதகோபலோப
நிர்மூடனானும்ப ருடமருவலரிதென்று
நெட்டுயிர்ப்பித்தகாலம்
அஞ்சாதேயென்றெனக் காதரவுசொல்லவோ
யந்தரத்தானமாக
அன்பாகமுன்புவந் துபதேசமருள்செய்த
வாதியேஸ்ரீரங்கனே. க

பேசாதமௌனியுட் புறம்பொன்றதாம்பெரியர்
பேசுமனமக்களாசைப்
பேய்கொண்டுபேசுவினிற் றேய்பேர்க்கழுவைபோற்
பொய்யைமெய்வேடமாக்கி
தேசாதிதேசமுந் தீர்த்தங்களாடினம்
திருவடிகளைப்பணிந்தால்
தீவினைகள்தீருமென் றாசீர்வதித்தத
திருத்துளவநீருமீந்து
வாசாகயிங்கிரிய வார்த்தைதசொல்வாரந்த
வஞ்சகர்தமைப்போலியான்
மனதென்றுவினைவொன்று காசாசைமேற்கொண்டு
வாடியழுமெனையஞ்சலென்
றுசாபசாசைத் துரத்திநாயடியனேற்
கந்தரத்தானமாக
அன்பாகமுன்புவந்துபதேசமருள்செய்த
வாதியே ஸ்ரீரங்கனே. ௨

பாவியேன்பொல்லாத கோவியான்பஞ்சமா
பாவியான்பெரியோர்களைப்
பணியாதபாவியா னேன்பிறந்தேனையா
பார்க்கவேசுவரிலெழுதும்

ஒளியம்போலஇவ் வுருவோடுதேனலால்
  ஒருவர்க்குளென்னையிட்டு
ஒத்தாசையுதவிதா னிதுவரையினுண்டுமோ
  உலகளந்தவனேயுனைக்
கூவியதமிழினாற் றோத்திரஞ்செய்தனன்
  கோதண்டராமராமா
கோபாலகிருஷ்ணனே பாற்கடலிலேபள்ளி
  கொண்டநாசியரூபா
ஆவிதானுடலைவிட் டகலுமுன்பாகநீ
  யந்தரத்தானமாக
அன்பாகவந்தெனக் குபதேசமதுசெய்த
  வாதியேஸ்ரீரங்கனே. ௫

தென்புடனேயாவருந் திருமால்தனக்கடிமை
  செய்வோர்கள்தங்களுக்கு
தீவினையகன் றபோ மென்றதாலுன் றனைத்
  தியானமேசெய்யவுறுதி
நம்புதலைபெந்தனுக் கொருநாளுமில்லையே
  நானதுக்கென்ன செய்வேன்
நாராயணாவேதபாராயணாவென்று
  நம்புமடியார்களுக்கு
சப்பிரமதாய்வந்து முன்னின் றனருளளித்து
  சகலவாழ்வுங்கொடுக்கும்
தாமோதராவுந்த மகிமையைத்தமிழினாற்
  சாற்றுதற்கெளிதாகுமோ
அம்புவியில்யாவருங் காணவேயெந்தனுக்
  கந்தரத்தானமாக
அன்பாகவந்தெனக்குபதேசமதுசெய்த
  வாதியேஸ்ரீரங்கனே. ௬

ஆற்றிலேவருகின்ற வெள்ளமதுபோலவென்
  னறிவுதனிலுந்தனற்றாள்
ஆனந்தமாகவே பொங்கிவருவெள்ளமதை
  யான்கண்டுமகிழாமலே
சோற்றுடலையழியா பொருளெனவெண்ணினேன்
  தோகையர்கள்மாய்கையதனால்
சுழல்வண்டுபோலவே யலைகின் றமனமுள்ள
  துஷ்டர்களினங்களுற்றேன்
கூற்றுவன்போலெனைக் கர்மவினைபோராடிக்
  கொல்லுதேதென்செய்வேனையா
காண்டீபர்வண்ணனே யேன்விமுகமுறயில்லையோ
  குவலயந்தன்னிலுந்த

ஆத்மகுருவாகியே தேவரீரெந்தனுக்
கந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே. ரு

கட்செவியின்மீதிலே பள்ளிகொண்டவனுநீ
கஞ்சனைவதைத்தவனுநீ
கபடநாடகனுநீ யாதிநாள்யானையைத
காத்தருள்புரிந்தவனுநீ
பச்சைநிறமாகவே வளர்கின்றமாலுநீ
பாருலகளந்தவனுநீ
பதியுநீகதியுநீ யடியார்களுள்ளமதில்
பண்பாயிருப்பவனுநீ
இச்சையாயுந்தனற் பாதமேகதியென்று
மெண்ணுமேவார் தங்களுக்கு
யிகபரமிரண்டிலும் மேலானவாழ்க்கையுட
னின்பங்கொடுப்பவனுநீ
அச்சதானந்தனே தேவரீரெந்தனுக்
கந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே. சா

ஒருவேளைபோசனஞ் செய்துனைவணங்கியே
னுடலொத்துவருவதில்லை
உள்ளமதிலளவற்ற கள்ளமிருப்பதால்
உறுதியோநிற்கவில்லை
திருவிறையுமார்பனே யுந்தனைக் கண்டியான்
தெரிசனஞ் செய்வதற்கு
திஷ்டியோதிறமில்லையீயுலகஸ்தலமதில்
சிலநாளிருக்கவென்றால்
நிருவாகமெந்தனுக் கில்லாதிருப்பதுன்
னெஞ்சென்னவறியாததோ
நீதியாயெந்தன்வரலாறுகேளிவ்வாறு
நெட்டுயிர்ப்புற்றலைந்தேன்
அரிவையர்கள்மோகவலை தன்னிலேவிழாம
லந்தரத்தானமாக
அன்பாகியெந்தனக்குபதேசமதுசெய்த
வாதியே ஸ்ரீரங்கனே. எ

கருமவினையாலே வருகின்றபிணிகளைக்
கண்டுநான்சொல்வதென்ன
காருத்தனேயுனதுவுள்ளமறியாததோ
கருணாகடாட்சகுருவே

மருமவலிமோகமும் நீரிழிவுகுட்டமும்
மாறாத வயிறுவலியும்
மாலையொடுசூலையும் பித்தமொடுவாதமும்
மண்டையிடி காச்சலுடனே
இருமலுடன்வாழ்கின்ற மந்தாரகாசமும்
இன்னமுமனேகவிதமாம்
எளியேனையிதுவெலாநாடாமலுந்தனல்
லிணையடிகளைப்பணிக்கவே
அருமறைகள்தேடியுங் காணாதவஸ்துவே
யந்தரத் தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே ௮

துஷ்டனிரணியன்முதலிராணியன்
றுஞ்சவெழின்மார்புகின்ற
துஷ்டநிக்கிரகசிஷ்ட பரிபாலனே
தொல்லுலகிலுந்தனடிமை
சாண்வயிறுவளர்த்திடுந் தாபத்திரியங்களாற்
றமிட்கவிதை பாடிபாடி
சண்டாளர்தங்களைக் கொண்டாடிவித்தமுஞ்
சங்கடப்பட்டுழன்று
வீண்பொழுதுபோகுவதெலாமுனதுசமுகமதில்
மெய்யாகவேயுரைத்தேன்
வேதவேதாந்தனே ஸ்ரீராமுகுந்தனே
விண்ணவர்க்கரிதாயரசே
ஆண்மைதலைபாயெனக் காதரவுசெய்யநீ
யந்தரத்தானமாக
அன்பாகிவந்தெனக் குபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே. ௯

ஊர்பேரிருந்தென்ன வொத்தாசையாயெனக்
குற்றாரிருந்துமன்ன
உறவாயிருந்தென்ன பகையாயிருந்தென்ன
வுறுதியாயெல்லையின்ற
பேர்தானிருந்தென்ன பெண்டிரிருந்தென்ன
பிள்ளைகளிருந்துமென்ன
பெருமையாயுலகமதை யாள்கின்றவரசாற்
பிரியமு மிருந்துமென்ன
சீர்தானிருந்தென்ன யானையொடுகுதிரையுஞ்
சிமைக விருந்துமென்ன
தென்புலைகள்செய்கின்ற சண்டனிடபாசமது
சேர்த்தெனைக் கட்டும்வேளை

ஆர்தானிருந்தென்ன வென்னுயிர்க்காதாரா
மாமோகஜேந்திரவரதா
அன்பாகிமுன்புவந்துபதேசமதுசெய்த
வாதியேஸ்ரீரங்கனே. ௰

ஆதிஸ்ரீரங்கபதிகம்-முற்றிற்று.

———

இராமப்பத்து.

—*—

கடலிலலைவதுபோனிதமுமெந்தன்
கவலையினாலவிவழிந்துகவியால்வாடி
உடல்மெலிந்துயானிருந்தால்பாவிமாயம்
ஒழிந்திடுவதெவ்விதமோவுலகமீதில்
விடமெனவேயெனைத்தொடரும்துன்பநீக்கி
வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்தாய்
நடனமிடுபரிநகுலசகாயனான
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. ௧

கற்பதருவாமுனதுசெய்கையென்றுங்
கயிலாசநாதவொன்றுகவிகள்பாடி
அற்பரிடஞ்சென்றெனதுதளர்ச்சியெல்லாம்
அறிவழிந்துயானேநிதமலைந்திடாமல்
விற்பனஞ்சேருன்கிருபையெனக்குநல்கி
வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
நற்புலவராமர்தொழும்ஞானஜோதி
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. ௨

எந்தனிடயோசனையுந்துன்பவாழ்வும்
இரவுபகலென்னுளந்திலிடைவிடாமல்
சிந்தனையேசெய்திருந்தாலெந்நாளுன்
திருவடிக்குநானடிமைசெய்வதையா
விந்தைபெறவேயென[illegible]லைநீக்கி
வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
நந்தகோபாலனைவந்தஜோதி
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. ௩

மாடுநிதிபெண்டுபிள்ளையுலகமியாவு
மற்றுந்தன்மலரடியைவணங்குதற்கு
மூடமெனுமிருள்விலகஞானதீப
முகுந்தனேயெனககளித்துமுத்தியான
வீடுதனிலென்னாளுமருவிவாழ்க
வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்

நாடுமயோத்தியிறைவனின்றவீர
    ராமவென்றுன்றனைநானம்பினேனே. ௪

பாதியுள்ளபசுவீழ்ந்தாலுலகிலுள்ளோர்
    பாதகித்துமனமிரங்கியெடுப்பார்திஷ்ட
புத்தியில்லாப்புலிதனக்குயாருதவிசெய்தார்
    பிறவியெனும்பெருமடுவிற்பொய்யாய்வீழ்ந்தேன்
வித்தகனேயெனக்கெவரோவின்னையன்றி
    வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
சத்தம்வளர்கோசலநாடாளவந்த
    ராமவென்றுன்றனைநானம்பினேனே. ௫

அகலியென்னசோதரமோவிரகலாதன்
    அண்ணன்மகனோவனுமலம்மான்றானோ
ஜெகமணிதர்பாண்டவர்கள்தாதைதானோ
    செயதர்கைவிடணனோநாதனெல்லானோ
விகிகழுடனெந்தனையாள்வதற்கு
    வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
நகமதினுவிரணியனைவென்றசிம்ம
    ராமவென்றுன்றனைநானம்பினேனே. ௬

எண்ணெயளமட்டுமெல்லால்விளக்கின்ஜோதி
    யிருண்டிடுமேலோதம்மாயமவ்வியற்கைபோலே
மண்ணுலகிலெவ்வுடலுமுயிரும்வேறாய்
    மாறுமிடத்தருமிணமாமலர்க்கையாலே
வெண்ணெயள்ளியுண்டவனேயெனக்கிப்போது
    வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
நண்ணுதிருமந்திரஞ்சேர்நற்சிதாபி
    ராமவென்றுன்றனைநானம்பினேனே. ௭

தஞ்சமென்றவடியேனைக்காத்திடாமல்
    சம்சாரசாகரத்திற்றளற்சிகூற
வஞ்சகமாய்க்கள்ளிவிட்டாலெந்தநாளுன்
    மலரடிக்கடிமைசெய்யவருவதையா
விஞ்சையர்கள்மகிழ்ந்திடவேயிந்தவேளை
    வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்
நஞ்சமுண்டபரமசிவன்மகிழ்பட்டாபி
    ராமவென்றுன்னைநானம்பினேனே. ௮

திடத்துடனின்னடிமையெனச்சேர்ந்தவென்னை
    செகமனிதற்றியர்தம்பாற்சேர்த்திடாமல்
கடத்தவிராபதகிராங்கஜேந்திரன்றன்னை
    காத்ததுபோலேழைதனைக்காருமையா
விடத்தின்மேற்றுயிலும்விபுதாகோவே
    வெயிலொளிபோலுன்பாதம்விளங்கச்செய்வாய்

வடைத்தகணைப்பொருத்தாளுஞ்செயகோதண்ட
ராமாவென்றுந்தனைநானம்பினேனே
அன்னைதந்தைகுருதெய்வநீயேயென்று
அனுதினமுமுனைப்பணிந்தேனடியேன்வாயாற்
சொன்னமொழிதவறாமல்வரந்தர்தாள்வாய்
தோத்திரமாய்க்கவிமாலைபத்துஞ்சொன்னேன்
கன்னல்மொழிலட்சுமியுங்களபமார்புங்
கரமதனிற்றிகிரிசங்குங்கருடன்மீதில்
நன்னயமாய்வந்தெனிருகண்முன்றோன்ற
ராமாவென்றுந்தனைநானம்பினேனே. ௰

இராயப்பத்து முற்றிற்று.

கருடப்பத்து.

நேர்துறை.

ஈபாதனுத்தரைநான்போயடுத்துயிளகிமனம்
பேயாய்ப்பிறந்துலைந்தென்றுளும்வாடிப்பிதற்றுகின்றேன்
மாயாப்பிறவிமயக்கறுப்பாயுன்னைவாழ்த்துதற்கு
நேயாய்க்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௧
தினமுமுன்றுமத்தைநாவாற்றுதித்தென்சிந்தைநொந்து
மனமூடுருகிமயங்குவனோவஞ்சநெஞ்சமின்றித்
தனதாகவாழ்கின்றவின்னடியோர்க்கடித்தரணிதமும்
இனைவாய்க்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௨
வாயேனிருந்தென்னைசெய்வதுகூற்றன்வருமளவில்
ஆயோனையுன்பாதநான்பணிந்தேனிந்தவம்புவியில்
நாயேனுக்கோர்துணைவேறுமுண்டோவரிநாரணனே
நீயேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௩
உறியேறிபால்வெண்ணெய்கையாலெடுத்தோடியுண்ட
பொறிசேர்களபப்புயாசலனேநெறிபோக்கியபொய்ச்
சிறியேனைநின்னன்பர்தொண்டனிற்சேர்க்கத்திருவடியாம்
நெறியேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௪
நீரேழுலகினினின்னையல்லாமலெனக்கினிதாய்
பாரோர்புகழ்தெய்வநான்பணியேன்பணியாதனனே
சீரோர்பொருந்துமடியார்கள்போற்றத்திருவுடனே
நேரேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௫
சனந்தானில்லாரைக்காசுகொடாதகசடரென்னை
சினந்தேரிதம்வகைசெப்புகின்றுருஞ்செயலிந்து

மனந்தானிரக்கங்கொளாதவுறுகணன் வரமிடர்
மினந்தேகருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௬
ஒதிபெருந்தாலென்னவுத்திரர்நாணுக்குதவியுண்டோ
கதியறுத்தென்னைகருப்பையுற்றேன்கமலக்கண்ணனே
மதிகொடுத்துன்றிருநாமந்துதிக்கவரமருளும்
நிதிபடைத்தோய்கருடன்மேலெழுந்தென்னையிரட்சிப்பையே. ௭
துக்கப்பயிர்விளையும்மனத்தோட்டகற்றோற்பையுளும்
விக்கலுங்கக்கலுமுக்கெமாம்வினையென்றுயரம்
புக்கிடமின்றிப்பொடியாகச்சாய்க்குநற்சிறகை
நெக்குங்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௮
இரைந்தேயுனதுதிருநாமந்தன்னையிரவுபகல்
கரைந்தேமனதுகவலேவிண்டேனென்னைக்காத்தருள்வாய்
விரைந்தேவருகவிதுவேளைவேளைவெதும்பமணி
நிரைந்தேககருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௯
மத்தகத்தானையின்வாய்திறந்துன்பெயர்வாழ்த்தருள
வித்தகத்தாழிவிடுத்தளித்தோய்வினையென்பவித்தை
சித்தமதிற்பொறுத்தெந்தனையாளத்திருவுடனே
மித்தங்கருடன்முதுகேறிவந்தென்னையிரட்சிப்பையே. ௰

கருடப்பத்து-முற்றிற்று.

—()—

போற்றிப்பத்து.

—✻—

நாரணுபோற்றிபோற்றி நரசிம்மருபாபோற்றி
காரணக்குருவாய்வந்தென் கவலைதீர்ப்பாய்போற்றி
வாரணந்தன்னைக்காத்த மாதவாபோற்றிபோற்றி
சீரணிந்திலங்கிவாழும் ஸ்ரீரங்கநாதாபோற்றிபோற்றி ௧
வாமனரூபாபோற்றி மணிமச்சகூர்மாபோற்றி
ராமனேராமாபோற்றி நற்பயந்தருவாய்போற்றி
காமனையீன்றாய்போற்றி கபடநாடகனேபோற்றி
சேமமாயென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௨
செங்கண்மாலரியேபோற்றி திருமகள்கொழுநாபோற்றி
சங்கணிகரத்தாய்போற்றி தரணியையளந்தாய்போற்றி
இங்கெனக்கருள்வாய்போற்றி எந்தையேபோற்றிபோற்றி
திங்கள்சேர்வதனுபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௩
அகலிகைக்கருள்வாய்போற்றி அரக்கரைவதைத்தாய்போற்றி
முகினிறத்தானேபோற்றி மூர்த்தியேபோற்றிராஜ
பகனெனவந்தாய்போற்றி பாயசெவ்வாயாபோற்றி
ஜெகமுண்டநாதாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௪

பஞ்சவர்கள்தூதாபோற்றி பாருலகளந்தாய்போற்றி
வஞ்சனைதீர்ப்பாய்போற்றி வரிசிலைவதைத்தாய்போற்றி
தஞ்சமென்றோரைக்காக்குஞ் சாரங்கபாணிபோற்றி
செஞ்சிலைக்காத்தாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௫

அரிரகுராமாபோற்றி அடியவர்க்கெளியாய்போற்றி
கரிதனைக்காத்தாய்போற்றி கஞ்சனைவதைத்தாய்போற்றி
விரிகடற்றுயின்றாய்போற்றி விளங்கனியெறிந்தாய்போற்றி
செருவினைவென்றாய்போற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௬

மாயனேபோற்றிபோற்றி வரமதுதருவாய்போற்றி
ஆயனேபோற்றிபோற்றி யடியனுக்கருள்மிக்கொண்டு
தாயனேவருவாய்போற்றி தசரதராஜனீன்ற
சேயனேபோற்றிபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௭

எந்தையேபோற்றிபோற்றி யிமையவர்க்கரசேபோற்றி
சிந்தையிற்குடியாய்க்கொண்ட தெய்வமேபோற்றிபோற்றி
பந்தம்வேரறுப்பாய்போற்றி பரப்பிரம்மவடிவேபோற்றி
செந்திருமார்பாபோற்றி ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௮

முத்தணிமார்பாபோற்றி மூவுலகளந்தாய்போற்றி
இத்தலமீன்றாய்போற்றி யேழைபங்காளாபோற்றி
பத்தர்கட்கரசேபோற்றிப் பாசம்வேரறுப்பாய்போற்றி
சித்தம்வைத்தென்னையாளும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௯

இருவினைதொலைப்பாய்போற்றி யேகமானவனேபோற்றி
திருவுருகருடனேறுந் தேவனேபோற்றியுன்பா
லுருகியாவுரைத்ததோத்ர முலகளந்தவனேபோற்றி
திருவடியெனக்குநல்கும் ஸ்ரீரங்கநாதாபோற்றி. ௰

போற்றிப்பத்து-முற்றிற்று.

பரப்பிரம்மப்பத்து.

என்னால்முடிந்திதுநாள்வரைக்குமிரவுபகல்
சொன்னேன்தமிழின்வழியாகவென்றன்துயரமெலாம்
இன்னுமுனதருணல்குவாயெளியேன்றனக்கு
பன்னகமேற்றுயில்சீதாராமப்பரப்பிரம்மமே. ௧

எத்தனையோவருகோடானகோடியெடுத்தனுந்துப்
புத்தியயங்கியுன்பாதாரவிந்தப்பொருளறியா
தித்தலந்தன்னிலுழல்கின்றாயினனேன்மைவழிப்
பத்தனைக்காத்திடுஞ்சீதாராமப்பரப்பிரம்மமே. ௨

செங்கமலத்திருமார்பமுநாவுன்றிருவடியை
மங்களமாகப்பணிந்தேனுளத்துனைவாழ்த்தியின்றேன்
இங்கிதமாகவருள்நல்குவாயெளியேன்றனக்கு
பங்கையஞ்சேர்பதசீதாபிராமப்பரப்பிரம்மமே. ௩

மின்னார்க்கொடியிடைவேல்விழிமாதரைமேவித்தம்
பொன்னுக்கலைந்துனைப்போற்றமனைவிப்புவியுகத்தேன்
இன்னிலந்தன்னிலருள்நல்குவாயெளியேன்றனக்குப்
பன்னுதமிழ்க்கருள்சீதாபிராமப்பரப்பிரம்மமே. ௪

மச்சகூர்மவராகநரசிம்மவாமனனை
அச்சுதநாமத்தரிகிஷ்ணநாமனையான்பணிந்தேன்
இச்சையதானவருள்நல்குவாயெளியேன்றனக்கு
பச்சைநிறமுள்ளசீதாபிராமப்பரப்பிரம்மமே. ௫

இந்திராதிபோற்றியபொன்னரங்கேசனிணையடியைச்
சொந்தமதாகவேநான்பணிந்தேனிந்தத்தொல்லுலகில்
எந்தையுன்மைந்தற்கருணல்கியாண்டிம்மைதந்தரு
பைந்தமிழும்புனைசீதாபிராமப்பரப்பிரம்மமே. ௬

சுருதிமொழிந்தமுறைப்படியுன்னைத்தொழுதிறைஞ்சிக்
கருதிமுக்காலமுங்கைகுவித்தேனற்கதிபெறவே
இருவினைதீரவருள்புரிவாயெளியேன்றனக்குப்
பருதிகுலத்துற்றசீதாபிராமப்பரப்பிரம்மமே. ௭

மாத்தலராகியமங்கையராசையுமாமயக்கக்
நீத்தவனேயென்னுருவொழித்தால்திருவேங்கடவா
ஏத்தத்தாயடியார்க்கருணைகுமிருவிழியாற்
பார்த்தெனைக்காத்தருள்சீதாபிராமப்பரப்பிரம்மமே. ௮

வையகந்தனிற்பைபைசாதலோபியர்வாசல்சென்று
பொய்யுரைசொல்லிப்புகழ்ந்துறவாடிப்பொரித்துலைந்தேன்
ஐயனேயுந்தனருணல்கியாண்டருளாயிரம்வாய்
பையரவிற்றுயில்சீதாபிராமப்பரப்பிரம்மமே. ௯

வேண்டிலேன்மண்ணில்வேந்தர்தம்வாழ்வும்பத்தாசெல்வம்
நீண்டபொன்மேன்முடியிந்திரப்பட்டமுமயமித்திபமாம்
ஆண்டவனேயுன்னடியார்க்கடியவனாகவருள்
பாண்டவர்நேயாசீதாபிராமப்பரப்பிரம்மமே. ௰

பரப்பிரம்மப்பத்து முற்றிற்று.

உ

குருவிருத்தமாலை.

பெண்ணாசையும்பூமியாசையு
மின்னாசையும்வேண்டிவிரும்பிலேன்
சொன்னகான்றொடருமக்காலையில்
உன்னதுள்பதமுள்ளத்துறுகியே. ௧

வாவிதன்னில்வனமொண்டகுமண்டம்
தாவியோரிடம்தங்கியவாறுபோல்
ஆவலாவியுடனுமுன்னாணையே
மேவுவோர்நிலைவிடருணாகனே, ௨

இரும்புனேசம்மெனுமனத்தியரை
விரும்பியான்றுதிமேவுதனீதமோ
சுரும்புமொய்க்குந்துளவணிமாலையாய்
அரும்பொன்னுடையரிகரிராமனே. ௩

கடலுப்புநற்கலக்கக்காயுதே
ருடனிசைந்திடினுண்பாரவ்வாறுபோல்
உடலுனுயிருநினைப்பாலதாம்
அடிமைசெய்தெனையாட்கொள்ளவேண்டுமே. ௪

கள்ளவைம்புலக்கள்ளகசடரை
மெள்ளவிட்டுவெளியிற்பிரிந்துயான்
உள்ளமானவொருவனைக்கண்டசீர்
வள்ளலென்றுவணங்கவருள்செய்வாய். ௫

பூமிதன்னிற்பொருந்தினரைத்திரை
சாமியென்றுரைசாற்றலுநீதியோ
நேமிகையுளிறுத்துவச்சஸ்தல
சாமிநம்பினன்றாமரைதாளையே. ௬

உனைவணங்கவிரித்தென்னுடற்காம்
வனமிக்குங்வகையுளதேவையா
தினமிப்படிமாதைசிதறிநற்
கனவிலுன்னையுங்காண்பனோகர்த்தனே. ௭

ஒங்கலமுமிதின்றிடிலோரவல்
நேர்கிடைக்குமெனுமொழிநிச்சயம்
சீர்பதத்தைத்தினந்துதிசெய்தனன்
கார்வண்ணக்கண்ணாகாத்தருளெந்தையே. ௮

என்னசொல்லியுமிரக்கமில்லை
வன்னநெஞ்சாகிமனமிருப்பானாகில்
அன்னமேருமயன்செயலல்லது
பின்னையாதென்றும்பேசுவதில்லையே, ௯

படிக்கலாந்திருநாமத்தைப்பாடியே
நடிக்கலாமுன்னுடைக்கூத்தையே
பிடிக்கலாமின்னடியார்பொற்றாளையே
இடிக்கலாமனதொடுக்கமதில்லையே. ௰

உன்னையன்றியுலகினில்வாழ்பவர்
தன்னைநம்பத்தகாதுகண்டாயினி
அல்லையாயெனையாதரியாவிடில்
பின்னையார்துணைபேசப்பிராமனே. ௧௧

தாயுந்தந்தையுஞ்சற்குருதெய்வமும்
நீயல்லாதென்றனெஞ்சினில்வேறுண்டோ
சேயன்றிவினையாரச்செயாவிடில்
மாயனேயுன்மகிமைகுறையுமோ. ௧௨

ஆர்க்குந்தீவினைநோக்கனுகாமலே
காக்குந்தெய்வக்கருங்கடல்மேனியாய்
ஏக்கமாமெனையின்பம்வைத்தருளுவாய்
தீர்க்கமாஞ்சகாதஸ்ரீராமனே. ௧௩

வாடிச்சோம்பிவதங்கும்பிரியனுங்
கோடிப்பொய்யுநல்லூரியம்போலவே
தேடினின்றுகிளைக்குமெளிபகை
நாடிக்காக்குநாராயணனுமனே. ௧௪

கண்ணுமூக்குஞ்செவியும்கைகாயமும்
உண்ணும்வாயுமுடற்றத்துவமிலை
நின்றிடும்படிநின்னருள்செய்குவாய்
மண்ணும்விண்ணுமளந்தருள்மாயனே. ௧௫

வாக்குநெஞ்சமனமுங்கலங்கவே
ஆக்கிரமித்தென்முனந்தகம்வந்திடில்
சீக்கிரமத்திற்றிருவுடன்றோன்றியே
காக்கவேணுங்கருங்கடல்வண்ணனே. ௧௬

வாசமாமலர்மான்மாதங்கொண்டுனைப்
பூசைசெய்துபுகழ்ந்துறைபாமலே
தேசமோசதிருக்கிலலைந்துவீண்
மோசம்போனேன்முராரிமுகுந்தனே. ௧௭

காந்தமூசிக்கலக்குப்புணர்ப்பென
மாந்தர்வாழ்க்கை யக்கத்திலாழ்ந்தனன்
பாங்கமாசப்படித்திடுமெய்யனோப்
தீர்த்திடச்செய்யுந்தனதயாளுவே. ௧௮
வெக்கமாகிபபாசவோற்றிட
தக்கபோருள்தந்தெனையாளுவாய்

இக்குவேலையுமின்றனற்றர்னைதயே
இக்குவேறில்லைஸ்ரீரங்கநாதனே. ௰௯

எந்தனுள்ளத்திருத்திநின்சீரடி
சிந்தையாறத்தெளிந்துகொள்ளாமலே
பந்தமாகியபாசப்பிணிப்பினேன்
எந்தநாட்கரையேறுவனெந்தையே. ௨௰

நீங்கியாயுளைநித்தமும்போற்றியே
சாதிவாறுதவிர்ந்துளப்பெற்றிலேன்
ஆதிமூலமென்றியானையழைத்தநாள்
ஓதும்வார்த்தைமுன்னோடியமாயனே. ௨௧

போற்றிசெய்தனைப்பூதலத்தோரெல்லாந்
தோத்தரித்துதிக்குநற்றெய்வமே
கூற்றனென்னுயிர்கொள்ளைகொள்ளமுனம்
காத்திடக்கடன்கார்நிறவண்ணனே. ௨௨

உரிமையெந்தனுக்குன்பதமல்லது
பொருமைநேரும்பிரபஞ்சமில்லையால்
கருவிணுசைகடக்கவெனக்கருள்
திருவளஞ்செரிசீதைமணாளனே. ௨௩

நாளுங்கோளுந்திதியுண்டகேந்திரம்
தேளும்பாம்புஞ்சிருமையுங்குளவியும்
வாளுமாமறலிக்கயிற்பாசமும்
மாளவந்தென்னையாளுவைமாயனே. ௨௪

தெய்வமென்றுனைச்சிந்தையிலெண்ணியே
கைகள்கூப்பிக்கசிந்துபணிந்தநான்
வைவன்வாழ்த்துவன்வனைதரோபெய்திலேன்
செய்வின்னருட்சீதாபிராமனே. ௨௫

மாவிலந்தனில்வாழ்கின்றபேயனை
சலனமாகவிகட்டிசெப்பாமலே
ஞானவானரைநாடியபாதனே
மோனமாகியமுத்தியளிப்பையே. ௨௬

மாய்கையென்றுமோரன்னைமதித்தனள்
சேயஞானந்திரம்பினின்றன்பத
நேயமாகியநேசர்க்குக்காசனே
ஞாயமோகைவிடுதல்ஜநார்த்தனே. ௨௭

உந்தன்பொன்னடிக்கேதுசெய்தேழைபான்
எந்தநாதர்க்கியம்பியிறைஞ்சுவேன்
நந்தகோபனசோதைக்குவளர்ந்த
மைந்தனேமுகுந்தாவாசுதேவனே. ௨௮

எந்தநெஞ்சினிலெண்ணியவெண்ணமும்
சிந்தைமானப்பிர்விக்னப்பாக்கியமும்
உந்தனுக்குரைத்தென்றுமேயுண்மையாய்
தந்தனன்றத்தஞ்சாரங்கபாணியே. ௨௯
என்னசெய்குவனென்றுயர்தன்னையும்
பின்னமாகப்பிணிப்பையுநோயையும்
சொன்னதுதக்தவன்றுணைபடிநாடியே
இன்னமுங்கேட்கவில்லையோராமனே. ௩௰

குருவிருத்தமாலை-முற்றிற்று.

௨

ஆதிமூலப்பத்து.

அனந்தனேவமுதருந்தெய்வமென்றற்பரைத்தமிழாற்
றினஞ்சேர்த்தயிர்துத்திரிகின்றபேதையின்றீங்ககற்றி
கனந்தேறனதுகழலிணைபோற்றிவலையரி
மனந்தோனெனக்களித்தாளாதிமூலமகாதெய்வமே. ௧
பரியாசமாயுனைநாவாற்றுதிப்பதும்பன்னுதமிழ்த்
தெரியாதபேரிடஞ்சென்றுரையாடியசிறுமையெல்லாம்
பரிவாயுரைத்தெந்தனெஞ்சுபுண்ணாகிப்படுந்துயரம்
மரியாதையோவெனையாளாதிமூலமகாதெய்வமே. ௨
கலையான்மயக்கியகண்ணார்வலையிற்சிக்குருகி
நிலையானவாழ்வென்றவர்மனைக்கேகித்தேகசம்வைத்து
துலையாப்பிறவிக்கடற்கரையோத்துணையுமற்றேன்
மலையாமலெந்தனுக்காளாதிமூலமகாதெய்வமே. ௩
சொல்லாததோவுன்றிருநாமமல்லுவைசிந்தையினி
னில்லாததோநின்றிருவடிநின்னடியார்க்குறுஞ்
சொல்லாததோஜகரட்சகநீதிதொடர்ந்திடின்மேல்
வள்ளாளகண்டனீயாதிமூலமகாதெய்வமே. ௪
அன்றுனிலங்கைப்பதிவாழ்தாட்சகாத்தனையுஞ்
சின்னபின்னப்படகோதண்டமேந்துஞ்செய்வரதா
பன்னகமேலினும்பார்கடன்மீதினும்பள்ளிகொண்ட்
மன்னுவடிமையைக்காவாதிமூலமகாதெய்வமே. ௫
நோவென்றனைக்குஞ்சரங்கூவுஞ்சாலையிற்கோகனை
தாவென்றவோட்டத்தில்சக்கரத்தாற்கிஞ்சுமாரனைமுன்
நீவென்றகாலமும்வேந்தகோலமழினைத்தடைந்தேன்
வாவென்றனையழைப்பாயாதிமூலமகாதெய்வமே. ௬
காயாதபாலுற்றவெண்ணெயைப்போலுநற்காவியத்தை
ஆயாதசொற்பொருட்பாப்போலுமுந்தனருள்விரும்பி

சேயெனவத்திற்பிரிந்திளைத்தேனமன்சேருமுன்னே
மாயாவடிமைகொளுமாதிமூலமகாதெய்வமே. ௭
ஆதாகிசென்றுமுன்னைவரைக்காத்தநற்சோதியென்றே
வேதன்முதலிந்திரன்விண்ணோருநய்போற்றினர்மேதகன்யான்
ஆதாரம்வேறில்லையுன்னையல்லாதடியேற்கருள்
மாதாபிதாகுருநீயாதிமூலமகாதெய்வமே. ௮
ஓயாக்கவலைபடுவீழ்ந்துமுன்றெந்தனுள்ளமெல்லாம்
நீயாகிவெந்துவருகுதைடோதிருவேங்கடவா
தாயாகிவந்தெனைக்காத்தருள்வாயிந்தத்தாரணிக்குள்
மாயாவதாரனுநீயாதிமூலமகாதெய்வமே. ௯
துளபாபரணக்கவுஸ்துவளினர்துலங்கிவரத்
தளர்கின்சிரடியான்தொழுதேனச்சுதானந்தனே
இளகாதிருப்பதென்றாழ்பேக்கினின்னன்டர்க்கேவல்செய்ய
வலமாகவந்தெனைக்காவாதிமூலமகாதெய்வமே. ௰

ஆதிமூலப்பத்து-முற்றிற்று.

௨

சிந்தையின்பத்து.

கண்டாக்கால்முறைமைசொலுங்காணவிட்டால்
கலீரென்றுபேர்சொல்லுங்கசடலோபச்
சண்டாளப்புலையர்களை அயன்சிருஷ்டித்தான்
சமஸ்தானபதிக்குமூன்றுதரணிமீதிற்
கொண்டாடிப்பணக்காரகுபேரனென்று
கூசாமல்மாறினென்றுகூறியானும்
திண்டாடியலையாமலருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௧
இப்பாரில்விளங்குகின்றநீதிதன்னை
யெண்ணிமனமுணராதயீனமார்க்கத்
தப்பானபேர்களிடஞ்சென்றயானும்
சன்மார்க்கநெறியுடையதனவானென்றும்
ஒப்ப ருமில்லையென்றுங்குணவானென்றும்
உத்தமனீயென்றுமிதமுறைக்குநாவாற்
செப்பாமலெந்தனுக்குன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௨
செகதாலுமறைக்காசுநையைவிட்டுச்
செலவழிக்காலுத்தரிடஞ்சென்றயானும்

மற்றாருமில்லையெனக்குன்னையல்லால்
மகாராஜனேயெனதுவறுமைதீர
ஒத்தாசைசெய்திடுவாயிந்தவேளை
யுன்மையறியுடையவனேயென்றுசொல்லுஞ்
சிற்றாசையினையொழித்துன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௨

நன்மைநலமறியாதபேர்கள்கோடி
நகைவகையும்முடைகளுமணிந்தேசெட்டிப்
பொம்மைகள்போலிருப்பார்களவர்கள்மீதில்
புகழுடையதமிழ்ப்பாடிப்பொருளைவேண்டி
இம்மைதனிலெளியேனைக்காக்கவந்த
இந்திரனேயென்றுகெம்பிரந்திடாமல்
செம்மையுடனெந்தனுக்குன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௩

கற்றவர்க்குவித்தையென்னவருமையோதான்
காசுபணமெளிதோநீகருதிக்கேட்ட
பித்தனேபோயெங்குவந்தாயெனக்குவேறே
பிழைப்பிலையோவென்றுசொல்லும்பேயர்மீதில்
நற்றமிழைப்பாடிவிநயமிலேந்திடாமல்
நன்மார்க்கவழிப்படியேநடப்பதற்கு
சித்தமதுதெளிந்திடவேயருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௪

பொல்லாததுன்மார்க்கமுள்ளபேரை
போயடுத்துமுகம்பார்த்துபுகழ்ச்சியாக
வில்லாளிவிஜயனென்றும்குலனென்றும்
மேதினியைப்படைத்தளிக்கும்விமலனென்றும்
உல்லாசவில்லாளிமதனனென்றும்
உரைத்துரைத்துஅறிவழிந்துஉலகமீதில்
சொல்லாமலெந்தனுக்குன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௫

பொய்யானபேர்களிடஞ்சென்றுயானும்
பொறுமையுள்ளதருமனென்றும்வீமனென்றும்
மெய்யானவரிச்சந்திரன்சிபிதானென்றும்
மேதினியையளந்தகுபேந்திரனென்றும்
ஒப்பாருமுடையவிக்ரமார்க்கனென்றும்
ஓலைதனிலெழுதியொருகவியைப்பாடச்
செய்யாமலெந்தனுக்குன்னருள்செய்தாளும்
ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௬

மோசமுடன்கொலைகளவுகாமஞ்செய்யும்
　　மூழுமுடர்தங்களிடமுன்னேசென்று
நேசமுடன்றமிழ்ப்பாடிப்பொருளேசொல்லி
　　நிச்சயமாயுந்தனிடசமுகந்தன்னே
வாசமுடநம்பிவந்தேனெளியனென்று
　　வயிறுவளர்த்திடுங்கருமமனதிலுன்னித்
தேசமதிலலையாமலருள்செய்நாளும்
　　ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௮

நம்பியிருக்கின்றோர்க்குரெண்டுபேசும்
　　நயமறியாவுலுந்தரிடம்நாடிநாவால்
சொம்புடனேபதம்பாடிப்புகழ்ச்சியாகச்
　　சுந்தரமயுனேப்போலுஞ்சுவர்க்கத்துண்டோ
சம்பிரமமாயெந்தனிடவருமைதீர
　　தயவுசெய்வாயென்றுசொல்லித்தமியேன்றானும்
தெம்புடன்வாடாமலருள்செய்நாளும்
　　ஸ்ரீரங்கநாதாவென்சிந்தையானே. ௯

மரந்தொருவேனயினிலரைக்காசுதானும்
　　வழங்காதலோபியர்மென்வரிசையாக
நிரந்தரசத்தமிழ்பாடிபொருளேவேண்டி
　　நித்தமிதுவேலைப்தாடலைந்துவாடி
இறந்துபிறந்திதுவரையுந்திரிந்தேய்ந்தேன்
　　எனையாளும்பொன்னரங்காகதியென்றுற்றேன்
சிறந்தருள்சேர்தாசருடன்யாலுமொப்பாய்ச்
　　சேர்த்தருள்ஸ்ரீரங்காவெந்தன்சிந்தையானே. ௰

சிந்தையின்பத்து-முற்றிற்று.

அஷ்டாட்சரத்திருப்புகழ்.

பூமிதனிலேபிறந்து பாவமெனவேவளர்த்து பூவையர்கள் பாலே யுண்டுவெருநாளில், பூசைமிகவேபுரிந்து ஆசைவெதுவாய்நினைந்து பூர்வ வினைபாலடைந்த-பொருள்கூடி.

காமவழிமேகனிவீழ்ந்து மோகமுலூடிறங்கி காலமிலே கொளாமலாடி மலமவாடி, காவமமாலலைந்து மாயமிருளான் மறைந்து காதலி பொன்மக்கள்வாழ்வு-பெறலாமோ.

பாமர்கள் மாளவென்று ராமசரமேவியன்றுபாழ்படயிலங்கை செற்ற-ரகுநாதா.
பாவலினைதேடிவந்தென் நாவியைவருத்திடாமுன்பாதமலர்ச்சேர அன்பு-அருள்வாயே.
சேமகரமாகவந்தன் ராமதிருநாமமந்த்ரத்யானமெனவேதுதிக்குமிடியேன்முன்.
சீதைமணவாளனென மாதவமுகுந்தஞான சீர்கருடன் மீதிலேறிவருவாயே.

வேறு.

தோகையர்வலைக்குள் வாகுடனேசிக்கி நன்பமிகவாகி-மெலியாதே,சூலைமகிரவாலைவாலைசுகரோகஞ்சோகைபிணிநோய்க ளணுகாதே.
வேகமுடனேமன் ஆகமுருகும்அளி யேவிடுமோர்பாசம்-வரியாமுன், மேதினியிலுந்தன்பாதமலர்தந்தென்வேதையறவந்தென்விழிகோடா.
வாகைபெறுபோரில் பேசுகசாமேவிவாளவுணர்மாயச்-சிறைதீர; மாருடனேபோத்தி மாதையும் அருத்தி மாமுடிபுனைந்த-ரகுநாதா.
ஓகையுறுதம்பிமார்களொடுநம்பியுன்னடிமைநம்பு- மறமானை, டொக்குசிறைவீசு பூங்கருடனேறி ஓங்கலெனவென்முன்வருவாயே.

வேறு.

அலைக்கலைத்தழி வினைசவிதமுமா உகந்தருந்தமிழ் பாடியபதமும் அரங்கதனி லுரையாடியவிதமும் ஒருகோடி, அரிக்குறலினர்போலேவிதமும் பிரிந்திடாவகை போயினமதமும் அலைந்துதேய்ந்துள வென்னிருபதமும்-குறைவாகி.
உலைந்தநானவர் பின்சென்றோடியும் இறங்கிடாரவர்கம்பொன் வாழ்விலி ஆசந்தமேன்மைமிநந்திடவாழ்பவர்-குவிசெல்வம், உயர்ந்தனன்றென்பதைவிடவேயிலை இறந்தரமுமிதுநிச்சயமென்றுடனுருண்டிடாதென தெருண்டபேர்களே.
குலைந்திடும்படி பேசியுமேசியும் இகழ்ந்தவேசைமேலாசையுநேசமும் குளிர்ந்தகங்கண மாதராபாசமும்-பெற்றோர்கள், குறைந்தவேழைகள் கும்பிகுளிர்ந்திட இரக்கைநேய்விடாமலருந்தியதாங்குநீபர்களோடுறவாயெனை-கூட்டாதே.
மலர்ந்தமல்லிகைமுல்லையரும்படனிறைந்ததாமரைமாமலர் விட்டியும் மகிழ்ந்தமாமணி யுந்தளவுந்திகழ்-ரகுநாதா, வளம்பொருந்தியமிந்திரைபாலுடனுளந்திருந்தியநல்லடியார்தொழுங்குலசிபவான்கருடன் மேலேறியேசிதமும் வருவாயே.

வேறு.

சாதமுனிவென்றனை வணங்கிலேன் வீலிலேமாதர்மயல் கொண்டுபிணியுண்டிலேனுணிலேவ சாடமுலேர்மெகடிட சமுசாரவாழ்க்கையொற்றளர்வேனே.

தூதர்களுமோலையொடு ஓடிவந்தாரிதோ மாதரின் மக்களுடன் மேல்விழுந்தாரையோர் சூசினைக டெரியாமல் மாறிபோ லெங்கணீர் சொரிபோதில்.

ஆதரவா யண்டையர்வந்து கூடியே மாதர் மனைமக்களோடினைத்து நிரோடியே வாமூடிபாடெ வுடர்தைடாய்நாடியே-அரைச்சாவி.

பேதைமனையாள்தொடப் பிள்ளை நானென்றிடப்போதமற்றிலர்த ப்பிரதேசர்-தழைந்திடப்போயெனவவள்தைப் டெருதகருடன்மீது-வருவாயே.

சடம்சட்டாவி யிறக்குமுன்னே குரு கூறெனச் சேஷமமிறுக்கு முன்னேநாடி தவறிப்போய்விலை தாண்டுமுன்னே முறை-புறவோர்கள்

இடம்விட்டொருவிச் சேருமுன்னேயென்சடனைக்கண்டுசலிக்கு முனேமுடி யிடையிற்றேரிலிழுக்கு முன்னேபறைபொலிவோடே.

படியப்பாடையெடுக்குமுனேவழி முடியப்பொரிகளு மேகுமுன் னேகடி படியுமாசனம் போகுமுனே கூட-மீதேற்றி.

குடமுமிட்டழுங்குற்றமுன்னேநடு தலையிற்கொள்ளிநாட்டமுன் னேகல குவலைமுண்டெரியுமுனே நீயருள்வாயே.

அஷ்டாட்சரத்திருப்புகழ்-முற்றிற்று.

—*—

அலர்மேலுமங்கைத்தாயார்பேரில்பதிகம்.

நேர்த்துறை.

குதேவினைக்கின்றமின்னார்கள்செய்யுந்தொழிலதனால்
வாதேபுரிந்துமயங்குவனேனிந்தமாநிலத்திற்
றிதேயகற்றுந்திருவேங்கடேசனைச்சேர்ந்தருளும்
மாதேதறியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௧

ஊனேமிகுத்திடுமங்கையார்க்கிரங்கதயுள்ளமட்டும்
நானேதவிக்கஞாயமுண்டோநற்றுலவரங்கற்
றேனேசமூர்திருவேங்கடனைச்சேர்ந்தருளும்
மானேயரியக்குடியலர்மேன்மங்கையாமகளே. ௨

பயமேமிகைக்குநமனெனச்சொல்லுங்கட்பாவையரால்
துயரேமிகத்தலையாமலுனைத்துதிசொல்லுவனோ
ஜெயமேமிகைக்குந்திருவேங்கடனைச்சேர்ந்தருளும்
மயிலேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௩

உடனேபலபலவாயெடுத்தோய்ந்துன்னுபயபதம்
படமேகதியென்றுயான்பணிந்தேனிப்பாப்பதனிற்
றிடமேகொடுக்குந்திருவேங்கடனைச்சேர்ந்தருளும்
வடிவேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௪

கருவூர்புகுந்துகுடியாயிருந்திந்தக்காசினியில்
இருமாதவஞ்செய்துநான்வளர்ந்தேனுன்னருணல்குவாய்
திருவேசிறந்ததிருவேங்கடேசனைச்சேர்ந்தருளும்
மருவேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௫

நிலைபானவாழ்வென்றுனிருதாளையென்னெஞ்சில்வைத்து
அலையாதிருக்கவாமருள்வாயிந்தவம்புவியில்
சிலைவளைத்ததிருவேங்கடேசனைச்சேர்ந்தருள்வி
மலையேயரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௬

விதியாயலைந்திடுஜன்மாந்திரத்துவினைப்பயனால்
கதியேபெறாதுலைந்தலைந்தேனுன்கருணைசெய்வாய்
நிதியேகொடுக்குந்திருவேங்கடேசனைநேயமுறு
மதியேபரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே. ௭

அகமேமகிழ்ந்துன்னடிபணிபாமலரிவையர்தஞ்
சுகமேமதியென்றுழன்றுங்கொடியேனிந்தத்தொல்லுலகிற்
புகழேவிளங்குமிதுவேதனுக்கியபூபதிக்கு
மகளேயரியக்குடிலர்பேன்மங்கைமாமகளே. ௮

தாழ்வேகொடுத்தெனைச்சஞ்சலத்தாழ்த்துஞ்சறுக்கிரத்தில்
வீழ்வேனடுத்தெனையாட்கொண்டிரட்சியுமெய்ப்பொருளே
ஆழ்வார்பணியுந்திருவேங்கடேசனகனிரைந்த
வாழ்வேபரியக்குடியலர்மேன்மங்கைமாமகளே ௯

தாயேயுனையன்றியெனக்கோர்துணைசற்றுமில்லை
நீயேமனுவொன்றுதந்தருள்வாயஷ்டலட்சுமியே
சேயெனையாளவும்வேங்கடமாலுடன்சேதிசொல்லி
மாயாமற்காத்தருள்வாயலர்மேன்மங்கைமாமகளே. ௰

அரியக்குடி

அலர்மேலுமங்கைத்தாயார்பேரில்பதிகம்.

முற்றிற்று.

நேரிசைவெண்பா.

—(*)—

பொன்னரங்கர்சந்நிதியிற் போந்துவளம்வந்துகண்டோர்
தன்னைச்சனனமப்பிணிகள்சாராது-இந்நிலத்தை
ஆள்வார்சுகம்பெருவா ராண்டபின்னும்பொன்னுலகில்
வாழ்வாரவர்க்குவரம். (க)

இவ்விடத்திற்றுனையிருக்கவென்றுனைமன்றட்டான்
அவ்விடத்தில்வாழ்க வையன்றுட்டான்-எவ்விடத்திற்
போடுவேன்பொய்யுடலைப் போக்கடித்துப்பொன்னரங்கா
நாடுவதென்றுன்னையே நான். (உ)

நானென்றவாணவத்தை நாசமுறச்செய்தடிமை
தானென்றெனையுன்றன் றாண்மலர்க்கீழ்-ஞானமுறக்
காத்தவனேமாற்றரிய காமவினையத்தனையுந்
தீர்த்தவனேநற்கெதியைச் செய். (௩)

என்னுடவெண்ணமெல்லா மெண்ணியெண்ணியேழையிரு
கண்ணுவிசோரக் கரைவானேன்-விண்ணோர்
வந்துதினம்வந்திக்கு மாதவனேவாகையினேன்
சிந்தையறிந் தென்னையாட் செய். (௪)

தீவினைப்போல்நல்வினையாஞ் சென்மப்பயமகலு
மாவினைமுன்காத்த வரதாயோ-ஆவலுடன்
சேஷ்டாங்கமாகுந் திருமந்திரமுரைத்துச்
சாஷ்டாங்கமாய்ப் பணியத்தான். (௫)

தீராவினைதீர்க்குஞ் செல்வப்பொருள்சேர்க்கும்
ஓராயிரத்தி னுறைந்திருக்கும்-நோரக
உபயகாவேரியிடை யுற்றவினித்தாரைகொ
ளபயவரதத்த னடி. (௬)

ஈனமுற்றதோலுதிர மென்புநரம்புசீயு
மானவுடற்சதமென்றுரைசையாம்-மாநிலத்தில்
நம்புவதனுயமோ நாராயணாகமலச்
செம்மதத்தைநீகிருபை செய். (௭)

நேரிசைவெண்பா முற்றிற்று.

இராமர்பேரில்பதம்.

இராகம்-நீலாம்புரி

பல்லவி.

ஊழ்வினைகளென்னைவந்தணுகாமலேஉதவிசெய்வாய்ராமா

அநுபல்லவி.

பாரிலேமறுமெனைத்தொடராமலே பதமருள்சார்வபூமா நல்ல
வரமருள்பரந்தாமா தசரதனருளிய ராமா (ஊழ்)

சரணங்கள்.

தாவுமூதண்டசராசரமெங்குஞ்
சரியாய்நின்றபெரி யோனே-உந்த
நாபிக்கமலமதிலேலோகம்பதினான்கு
நல்குமெழிற்கரி யோனே-பொல்லாத
தீவினைகளென்னசெய்தேனோநான்
பூர்வசென்மத்திலேயறி யேனே-இந்தப்
பூவுலகில்வந்துபாதம்வணங்கப்
பொருந்திலேனான்சிறி யேனே-பச்சை
ஆலிலைமேற்றுயில் வோனே-ஒருக்
காலுமறக்கறி யேனே-ஊழ்

மாதவனே அரிகேசவாவைகுண்ட
வாசம்விட்டுபுவி மேலேபோக
ஆதாவாகத்தசரதபுத்திர
னாகவந்தவன்பி னாலே இந்த
பூதலமெய்க்கவேராட்சதரைவென்ற
பூர்ணவமணி மாலே-நிதம்
சீதாபிராமனென் றனுதினமறவாமல்
தியானஞ்செய்வேனேவி னாலே-கிருபை
தென்புடன்செய்பொருக் காலே-திவ்விய
சம்பிரமமாம்நெடு மாலே-ஊழ்

சித்தசனேரங்க தாமனேகிருஷ்ணனே
தேவாமுகுந்தனே ராமா-எந்தன்
அத்தனேகோவிந்த அச்சுதானந்தனே
ஆணக்கூருயிர நாமா-சுத்த
பொற்றலம்போற்றவே கருடன்மேல்வந்தென்னை
புகழ்ந்தருளும்புய விமா-உந்தன்
பத்தன்பஞ்சாட்சரபேருள்ள தாசன்
பணிவிடைகொண்டருள் சோமா-உன்மேற்
பாரம்ரட்சிப்பது வின் போமா-கோதண்ட
திரனே சீதாபி ராமா (ஊழ்)

பதம்-இ-ம்-சங்கராபரணம்.

பல்லவி.

வேண்டாமையாயிந்தஜனனம்-ஒருக்காலும்
வேண்டாமையாயிந்தஜனனம்

அநுபல்லவி.

வேண்டாமையா மணித்தூண்டா விளக்கான
வித்தகனும்பரிசுத்தமயேஸ்வரன்
மெச்சிமகிழ்ந்திடுமச்சுதனேயிறும்
பச்சைவண்ணப்பரந்தாமாவென்மேற்பிழை (வேண்டா)

சரணங்கள்.

(௧) பஞ்சபூதமைந்துஞ்சேர்ந்துடலாயிந்தப்
பாரிலலேந்திரைதேடி கொஞ்சிக்
கொஞ்சிமொழிமாதரைக் கூடியாடி
குலாவிநமன்வர வாடி
நெஞ்சிலறிவில்லாமல் நினைவுதடுமாறியே
கெஞ்சிக்கெஞ்சிமிகக் கிலேசம்படுமனம் (வேண்)

(௨) ஒன்பதுவாயுள்ள கோட்டை-பூட்டில்லாம
லோரிநரியாடும் வேட்டை-அதிற்
செம்பொன்மணிவைத்த நாட்டை-யுருக்கொண்டு
திருவடியளிப்பாய்நல் வீட்டை
சம்பிரமாகவுந்தன் றயவில்லாவிடில்வாய்ந்த
துன்பசாகரத்தைத் துணையற்றுளனீந்த (வேண்)

(௩) நீர்மேற்குமிழியான காயம்-இதைநம்பி
நிசமென்றிருக்கி லபாயம்-இந்தப்
பார்மேலுன்னுடைய நேயம்-தமியன்மேற்
பட்சம்வைத்தருளுஞ்சகாயம்
கார்மேனியான கரிவரதேந்த்ரா
சீர்மேவுந்தேவர் தொழும்ராமச்சந்த்ரா (வேண்)

பதம்-இ-ம்-ஆகிரி.

பல்லவி.

இனியென்னலாகாதையா-உனைத்தேட
இனியென்னலாகாதையா.

அநுபல்லவி.

இனியென்னலாகாது முனிவர்பணியுநேசா
இஷ்டகாமியந்தரும் அஷ்டலட்சுமிவாசா (இனி)

சரணங்கள்.

௧. பாற்கடலில் குடியோ-பரமபதம்
பச்சையாலிலேயடியோ

ஏற்கும்பனு முடியோ-தேவரைக்கண்
டிணங்குவதெப்படியோ
மார்கமதாகவேவங்தென்னாட்சித்துக்
காக்கக்கடனுனக்குகார்மேகவண்ணனே (இனி)

(௨) தோத்தரிப்பார் சூழ-அயோத்தியில்
துணிந்தாய்நீயோ சாள
மாற்றியென்வினை மாளகிருபைசெய்து
மகிட்சியாயென்னை யாள
காற்றடிக்கத்தாழை பூத்திடுஞாயமே
நேத்திரக்திறந்தென்னைக்காத்தருள்மாயனே (இனி)

(௩) வேலையடைத்தபரனே இமையோர்கள்
வேதனைதீர்த்தசரனே
வாலைசகோ தானே-திருத்துள
மாலையணிந்தவரனே
ஆலையில்லாவூருக்கிலுப்பைப்பூச்சக்கரை
ஆமாகிசெய்கிறபுதுமையுனக்கக்கரை (இனி)

பதம்-இ-ம்-முகாரி.

பல்லவி.

தரிசிக்கவேணும் ஸ்ரீராமனை
தரிசிக்கவேணும் ஸ்ரீரங்கனை
தரிசிக்கவேணும் ஸ்ரீநிவாசனை
தரிசிக்கவேணும் ரகுநந்தனைத்

அநுபல்லவி

தரிசிக்கவேணும்நல்ல பரிசுத்தமாகிய
ஸ்ரீரங்கநாதனைப் பாரெங்கும்வாழ்பவர் (தரி)

சரணங்கள்.

(க) சாஸ்திரமாறுடன் பதினெண்புராணமுந்
தத்வந்தொண்ணூற்றாறுந் தனிநான்குவேதமும்
மாற்றியவனுடைய கீர்த்தியையுலகத்தில்
வரமிகுந்திடும்படி யிரணியன்செய்திட்ட
நாற்றிசையினுனை தோத்திரமாய்ப்போற்ற
நரசிம்மரூபமாய் ஊன்கொண்டவனுயிரை
சேத்தியதாகவே கூற்றுவன்போற்கொன்ற
நீலநிறமுள்ள மாலின்திருவடி. (தரி)

(உ) அண்டருமுனிவரு மெண்டிசையோர்களும்
அரக்கருபாதியிற் பொறுக்கமுடியாமல்
தெண்டமிட்டுனைப் போற்றிவணங்கிடத்
தேவர்முனிவர்தன் பம் டாவையுந்தீர்க்கவே

மண்டலத்திலயோத்தி ராசன்தசாதன்
மைந்தனென்றுதித்த சுந்தரவில்லினுற்
கண்டகனுகிய ராட்சதனைவெற
கரியமாலாகிய அரியின்திருவடி. (தரி)

௯. கஞ்சமலருதித்த மாமன் கஞ்சனுக்காகக்
கபடநாடகமுடன் கலியுகத்தினின்முனம்
வஞ்சக்கபடமாய் மருவியகிருஷ்ணனுய்
வந்துவல்லவனென்று பந்துபல்லோர்துதிக்க
பஞ்சபாண்டவர்கள் பாரதப்போர்செய்யப்
பார்த்தசாரதியாகிக் காத்தருளியதேவா
செஞ்சொன்மொழிந்திடும் பஞ்சாட்சரதாசன்
சேயனைரட்சிக்கும் மாயகோபாலனே. (தரி)

பதம்-இ-ம்-ஆரபி.

பல்லவி.

எத்தனைசொன்னுலுங் கேளாமலிருப்ப
தென்னபராமுகமோ.

அநுபல்லவி.

நித்திரையோ திருப்பாற்கடல்வாழ்கின்ற
நேசனேவைகுந்தவாசனே நான்தினம (எத்தனை)

சரணங்கள்.

க. மூவருமோதியராமமந்திரமென்று
முறைபிடுநால்வேதங் குன்னவோ நீமெத்தப்
பாவங்கள்செய்திட்ட பேயன்ராமாவென்று
பரமபதத்துற்ற தென்னவோ
ஆவலுடன்செய்த வால்மீகிகாவியம்
அத்தனையும்அருள் பண்ணவோ
தேவனைசீதாபிராமா வுன்னுமத்தை
சிந்தையில்நானிதமுன்னவோ (எத்தனை)

உ. விண்ணுடர்மகிழ்பெற ராட்சசப்பூண்டெல்லாம்
வேரோடறுத்தசரக் கையா-இந்த
மண்ணுண்டராஜர்கள்—ராமாயணமென்று
வாசித்துப்பெற்றபேரு பொய்யா
கண்ணாரக்கண்டுன்னைரங்கஸ்தலமென்று
காசினியோர்தொழ பெய்யா
என்னுளுமுந்தனடியையென்றெண்ணி
யிரங்காதிருப்பதென்னையா (எத்தனை)

ந. ஆரணனிந்திரன்யாவரும்போற்றிய
அஷ்டாட்சரமுள்ள மந்த்ரா-வெற்றி
வாரணந்தன்னைபடியினில்ரட்சித்த
வல்லவனேமாய சுந்த்ரா
காரணமாகவே ஆலிலைமேற்றுயில்
கபடநாடகமுன் தந்த்ராஅறி
நாரணனேயுந்தன் திருவடியேகதி
நான்பணிந்தேன்ராமசந்த்ரா (எத்தனை)

பதம்-இ-ம்-இமேருபதி.

பல்லவி.

ஐயனே ஸ்ரீராமா இந்த அவதிபபடலாமா.

அநுபல்லவி.

தெய்வமென் றுனை மெய்யாநம்பி நான் தியங்கித்திரியலாமா

சரணங்கள்.

க. என் றுமெண்ணமெல்லா
மெண்ணிப்பொய்யாய்ப்போனேனையா-கடை (ஐய)

உ. கண்ணுற்பாராய்ப்பெண்ணுக்
கல்லைக்கண்டாய்வழியிற் போய்யோ (ஐய)

ந. வஞ்சகம்சூதுடனமோசம்நெஞ்சினில்வைத்தோம்அந்தப்
பஞ்சபாவியர்நேம மஞ்சினேன்போதும் (ஐய)

ச. சேதியெல்லாநீயறிவாய் நீதிவரம்புரிவாய்ஞானச்
சோதியுநீதானேயெனக் காதியுநீதானே (ஐய)

ரு. தேசத்தோர்பயமொழிக்க வாசந்தாற்தசரதற்கு
இராஜராமாவென்ன வந்தகோசலகுணபுத்திரனே (ஐய)

சு. தப்பிதஞ்செய்தாலுமுனை யெப்படிவைதாலுமெனை
இப்பிறவிதீர்த்துன்தாசர் பொற்பதஞ்சேர்ததாள்வாய் (ஐய)

பதம்-இ-ம், புன்னுகவராளி.

பல்லவி.

அடிமைநானுன்னை விடேன்-திருவடி
யல்லாலவேறொன் றுந்தொடேன்

அநுபல்லவி.

மடுவிற்கஜேந்த்ரனை மாளாமலுயிர்க்காத்த
நெடுமாலேயுந்தன்பாத நிழலிலன்புசேர்த்து

சரணங்கள்.

க. ஆசைவலைவைய விசியே-யென்மார்பில்

பாஷைபலவும்பேசியே வாழ்க்கையாய்
பழித்துமிகவுமேசியே
நேசித்துன்பாதத்தைநித்தியம்பத்தியாய்
பூசித்தேனுணவப் பொறிவேரறுத்திட (அடி)

(உ) அஷ்டாட்சரத்தோனே யென்னை
ஆளுந்தயாபரனே
பட்டாபிராமாராமனே ஏழையான
பங்கிற்றீனதயாளனே
திட்டாந்திறமாகத் தீவினையெந்தனை
கிட்டாதபடியுந்தன் கிருபையைநான்பெற (அடி)

(ங) தேவர்கடுயர்தீர வயோத்தியிற்
செங்கோல்வளங்கூற
மூவுலகுஞ்சோர தசரதன்
மூத்தவழிசேர
ராவணாதியராம்
அவியழித்தெந்த னன்னையைமீட்ட (அடி)

பதம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பல்லவி.

தாருந்தாருமையா திருவடி-தாருந்தாருமையா.

அநுபல்லவி.

பூருவம்ராக்கதர் புன்கணகற்றலங்க
புஜபலவீரனே-தசரதராமனே. (தாரு)

சரணங்கள்.

(க) மாயவஞ்சியர்வலையிற்சிக் காமலே
வம்பரிடஞ்சென்றுவாய்புதைக் காமலே
காயம்வருந்திமிகப்பரதவிக் காமலே
கனவிலுன்மந்திரத்தைமறக் காமலே (தாரு)

(உ) நித்தியம்பதத்தைநான்கை விடாமலே
பசியென்போர்முகத்தைப்பார்த்துண் ணாமலே
இத்தரையிலென்னைத்துயர்தொட ராமலே
இந்தசனனமினிமேலும் எடாமலே (தாரு)

(ங) வல்லிருளாகியவெவ்வினை தீர்க்கவும்
மகிழ்வாய்கருடனேறிவாவெதிர் பார்க்கவும்
சொல்லுந்தமிழ்த்துதியின்பிழைகளைப் போர்க்கவும்
சுகமாவென்றனையுன்திருவடி சேர்க்கவும் (தாரு)

பதம்-இ-ம்-பைரவி.

பல்லவி.

இதுவாகிலுஞ்சொல்லுவாயே-சும்மா
யிருக்காதேபெருக்கானதோ

அநுபல்லவி.

மதனுதனுறிய மாயன்கோபாலனை
நித்தமுந்துதிசெய்து நீகதிபெறவே. (இது)

சரணங்கள்.

(க) தெருவிலுள்ளகோயிலைதேடிராமென்று மென்றும்
திருவிளக்கினைவைபயிட்டோமென்று மென்றும்
மருவெடுத்தன்புதஞ்சூடிராமென்று மென்றும்
வசனம்பனைசனிபாடிராமென்று மென்றும் (இது)

(உ) ஞானம்பெருளிவர்சேர்க்கிறா மென்றும்
கப்பினைபர்களைக்காக்கிறா மென்றும்
ஊனங்களானதைத்தீர்க்கிறா மென்றும்
உத்தமக்காரியப்பார்க்கிறா மென்றும் (இது)

(ந.) பிள்ளைக்குப்பாலைபுகட்டுகிறா மென்றும்
பூரணச்சந்திரனைகாட்டுகிறா மென்றும்
வெள்ளிஎழுத்தாணிபீட்டுறா மென்றும்
வெளிகதவங்களைப்பூட்டுறா மென்றும் (இது)

பதம்-இ-ம்-சங்கராபரணம்.

பல்லவி.

மறவாதேநீமனமே-ராமமந்திரம்-மறவாதே-நீமனமே.

அநுபல்லவி.

மறவாதேநீமனமே-யான்றிருபதத்தை
யிரவும்பகலாலுமிறைஞ்சக்கருஞ்சுகத்தை. (மற)

சரணங்கள்.

(க) யானையிரதமேறி யம்புவியாண்டாலும்
சேனைகாவலருச் சேவித்துநின்றாலும்
தானதருமங்களைத் தவறுமல்செய்தாலும்
ஞானபோதக்கலை நலமபெறவுரைத்தாலும் (மற)

(உ) உன்னைக்கெடுக்கநிந்தை யுரைத்துமுடியிட்டாலும்
அன்னைதந்தையர்சுக யாவுமடித்திட்டாலும்
கன்னமிட்டுக்கொள்ளை கள்ளரடித்தாலும்
வின்னவாய்தேகத்தில் வேதனைவிளைந்திட்டாலும் (மற)

(ங.) வாதாடித்திதாக வழக்குக்கிழுத்தாலும்
வேதாகமங்களை விவரமாய்க்கற்றாலும்

சூதாமதுபணிகள் தோணுமல்லைத்தாலும்
நிதாகவேசனி சென்மத்தில்லைத்தாலும் (மற)

பதம்-இ-ம்-ஆனந்தபைரவி.

பல்லவி.

ஏன்கவலைப்படுகிறாய்நெஞ்சே ராமனிருக்க (என்)

அநுபல்லவி.

மான்வடிவாகிவந்த மாரீசனைக்கொன்ற
மாதிவர்நாமத்தை யோதிப்பதய்பெறாமல் (என்)

சரணங்கள்.

௧. சற்றுந்தயையில்லாத சண்டாளருடன்கூடி
சன்மார்க்கந்தனைவிட்டு துன்மார்க்கத்தையேநாடி
எற்றுங்கொலைகளை என்னேரமுங்கொண்டாடி
யிரவும்பகலுமோர்சாண் கும்பிக்கிரைதேடி

௨. நல்லோரைக்கண்டுசாது சங்கஞ்செய்யாமற்றீதே
நமனுக்குநாள்தள்ளி நாய்போற்றிரிந்தாறுதே
சொல்லாதகாரியத்தைச் சிந்தையிற்குறியாதே
சொன்னமாணவேதை தீமையையறியாதே (என்)

௩. இகமதில்மானிடர்மேல் எனக்கென்ன அபிமானம்
எதுக்கோடிசெய்கிறாய்நீ சேதுவினில்ஸ்நானம்
மகிமைபெறக்காநதிச் செய்வானேன்தர்மதானம்
வானவர்துதிக்கும்ராம மந்த்ரந்தருமேஞானம் (என்)

ஸ்ரீனிவாசப்பெருமாள்பேரில்.

பல்லவி.

ஸ்ரீநிவாசனற்றிருவடிதரிசிக்க சென்மப்பிணிகள்தீரும்

அநுபல்லவி.

மாமிலர்கன்னிலே வாழும் அலர்மேலு
மங்கைபங்காளனருள் றங்குபங்கயபாவ (ஸ்ரீநி)

சரணங்கள்.

௧. மச்சமுதலாங்கூர்ம வாமனவராகனும்
அச்சுதானந்தானந்த வாமாசெவ்வாயனால்
பட்சமாய்ப்பாற்கடற் பள்ளிகொண்டருளிய
நிச்சயமுள்ளநம் நீதிவேங்கடேசனும் (ஸ்ரீநி)

௨. அரிகிருஷ்ணு யாய்ந்தகல்யாணனுங்
கிரிதனையெடுத்தோனங் கேசவமுகுந்தனும்
உயிர்பெதாயிர்வெண்டிண யுசக்தமுதண்டோனும்
பரிவுள்ள அடியார்கள் பங்கிலிருப்போனும் (ஸ்ரீரா)

௩. உருவாருவமாகி உளதுமிலாரகிதா
முதுகவிழ்துளசியை முடியிலணிவதாகி
இருவினைதுடைத்தன்பர்க் கினிமையருளியாண்டு
சிறுவனுக்கருள்செய்யுஞ் சீதாபிராமனும் (ஸ்ரீரா)

ஸ்ரீரங்கநாயகர்பேரில்.

காட்சிபதம்-இராகம்-தோடி.

வந்துகொண்டேன்-ஸ்ரீரங்கனைச்-சிந்தைகொண்டேன்.

அநுபல்லவி.

வந்துகொண்டேன் பந்தமாசற
மாதவனுகிய ஆதிமூலந்தன்னை (வந்து)

சரணங்கள்.

௧. அந்தணரோதியவேத புராணமும்
ஆழ்வாரருளியபிரபந்தத் திரளமும்
சந்திரபுஷ்கரணியில்ஸ்நானஞ்செய் நேசமும்
சைவவைஷ்ணவஞ்செய்யனுஷ் டானமும் (வந்து)

௨, சீதளமாககருங்கற்றான் சேர்வையும்
திக்கிக்குந்தாசர்கள்வந்தனப் பார்வையும்
ஜோதிப்பிரகாசபீதாம்பரப் போர்வையும்
துன்பமகற்றுந்திவ்யதிருவடிச் சேர்வையும் (வந்து)

௩. உத்திரதேசக்கிராஜாயிகள் கூட்டமும்
உத்தமரோர்காலினற்றவ நாட்டமும்
வெற்றிதரும்அநுமார்பரி யாட்டமும்
மேவும்அடியவர்தீவினை யோட்டமும் (வந்து)

ஸ்ரீராமர்பேரில்பதம் முற்றிற்று.

காவண்ணமாலைமுற்றிற்று.

—*—